


PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்

# பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY




சென்னை மலர்: 01 இதழ்: 245 17.04.2026 வெள்ளிக்கிழமை

Chennai | Volume: 01 | Issue: 245 | Friday | pages 8 | Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMIL NADU AND PUDUCHERRY

## இன்றைய நாள்

வெள்ளிக்கிழமை
(17-04-2026)
பராபவ ஆண்டு, சித்திரை-4
பிறை: தேய்பிறை
திதி
அமாவாசைமாலை 5.47 வரைபிறகு பிரதமை.
நட்சத்திரம்:
ரேவதி நண்பகல் 12.05 வரை பிறகு அசுவினி.
யோகம்
அமிர்தயோகம்
ராகுகாலம்
காலை 10.30-12.00 மணி
எமகண்டம்
பிற்பகல் 3.00-4.30 மணி.
சூலம் - மேற்கு.
நல்ல நேரம் :
காலை 6-7 மணி.
மாலை 5-6 மணி.

| | |
|---|---|
| மேஷம் | லாபம் |
| ரிஷபம் | பணிவு |
| மிதுனம் | இரக்கம் |
| கடகம் | பெருமை |
| சிம்மம் | பாசம் |
| கன்னி | உதவி |
| துலாம் | சாந்தம் |
| விருச்சிகம் | ஆக்கம் |
| தனுசு | மகிழ்ச்சி |
| மகரம் | நற்செயல் |
| கும்பம் | பணிவு |
| மீனம் | அன்பு |

# நாடாளுமன்றத்தில் தொகுதி மறுவரையறை மசோதா தாக்கல்.. எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு

**புதுடெல்லி, ஏப்.17:**

மகளிர் இடஒதுக்கீடு, தொகுதி மறுவரையறை மசோதா குறித்து விவாதிக்க 3 நாட்கள் சிறப்பு நாடாளுமன்ற கூட்டத் தொடர் தொடங்கி உள்ளது. இதனையடுத்து மறைந்த முன்னாள் உறுப்பினர்களுக்கு இரங்கல் குறிப்பு வாசித்த பிறகு, அலுவல்கள் தொடங்கியது.

இந்நிலையில் மக்களவையில் மகளிர் இடஒதுக்கீடு மசோதா, தொகுதி மறுவரையறை மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மசோதாக்களை மத்திய மந்திரி அர்ஜுன் ராம் மேக்வால் தாக்கல் செய்தார்.

மகளிர் இடஒதுக்கீடு திருத்த மசோதா, தொகுதி மறுவரையறை மசோதா அறிமுகம் செய்யப்பட்டதற்கு திரிணாமுல் காங்கிரஸ் எதிர்ப்பு தெரிவித்தது.



பெண்கள் இட ஒதுக்கீடு மசோதாவில் இஸ்லாமிய பெண்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் உள் இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று சமாஜ்வாதி தலைவர் அகிலேஷ் யாதவ் தெரிவித்தநிலையில், இடஒதுக்கீட்டில் இடஒதுக்கீட்டில் மதம் ம சார்ந்த வாய்ப்புகள் வழங்கப்பட மாட்டாது என்றும், மத அடிப்படையில் இட ஒதுக்கீடு கேட்பது என்பது ஒற்றுமையை சீர்குலைக்கும் என்றும் அமித்ஷா தெரிவித்தார்.

தொடர்ந்து அறிமுக நிலையிலேயே எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்த நிலையில், இந்திய ஜனநாயகத்தை முடக்கும் வகையிலும் அடிப்படை அரசியலமைப்பை தகர்த்து உரிமைகளை பறிக்கும் வகையிலும் மசோதா கொண்டு வரப்பட்டுள்ளது என்று கே.சி.வேணுகோபால் தெரிவித்தார்.

அவர் பேசும்போது மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா குறுக்கிட்டதால் அவையில் சலசலப்பு நிலவியது. எதிர்க்கட்சிகளின் கேள்விகளுக்கு உரிய விளக்கம் அளிக்கப்படும் என அமித்ஷா பதில் அளித்தார்.

தி.மு.க. எம்.பி. டி.ஆர். பாலு கூறுகையில், "சாண்ட்விச் போல 3 மசோதாக்களை ஒன்றாக கொண்டு வந்துள்ளது மத்திய அரசு என்றும் தொகுதி மறுவரையறை மசோதாவை திட்டவட்டமாக, சமரசம் இன்றி தி.மு.க. எதிர்க்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

மக்களவை-பேரவைகளில் 33 சதவீத மகளிர் இடஒதுக்கீட்டை 2029-ம் ஆண்டு முதல் அமலாக்கவும், அதற்கு ஏதுவாக மொத்த மக்களவை தொகுதிகளின் எண்ணிக்கையை 543-இல் இருந்து 850 வரை அதிகரிக்கவும் வகை செய்யும் அரசமைப்புச் சட்டத்தின் 131-ஆவது திருத்த மசோதா உள்பட மூன்று மசோதாக்களை அறிமுகம் செய்து, விவாதித்து நிறைவேற்றும் நோக்கில் இந்த அமர்வு நடைபெற்றது. இந்த நிலையில், அரசியலமைப்பு சட்டத்திருத்தம், தொகுதி மறுவரையறை உள்ளிட்ட 3 மசோதாக்கள் மீது மக்களவையில் 12 மணி நேரம் விவாதம் நடைபெறும் என்று நாடாளுமன்ற விவகாரத்துறை மந்திரி கிரிண் ரிஜுஜு அறிவித்துள்ளார்.

தேவைப்பட்டால் விவாத நேரம் நீட்டிக்கப்படும் என்றும் திருத்தச் சட்டம் தவிர மற்ற 2 மசோதாக்களை ஒன்றாக விவாதிக்க அனுமதிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். மசோதாக்கள் மீது இன்று (17ம் தேதி) மாலை 4 மணிக்கு வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# தொகுதி மறுவரையறை மசோதா நகலை எரித்து முதல்வர் ஸ்டாலின் போராட்டம்

**நாமக்கல், ஏப்.17:**

தொகுதி மறுவரையறை மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து கருப்புக் கொடி ஏற்றியும், மசோதா நகலை தீயிட்டு எரித்தும் தமிழக முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான திமுகவினர் நாமக்கல்லில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடாளுமன்ற சிறப்புக் கூட்டம் இன்று நடைபெற உள்ளது. இந்தக் கூட்டத்தில் தொகுதி மறுவரையறை தொடர்பான மசோதா நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு காங்கிரஸ், திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். தமிழகத்தில் வீடுகள் தோறும் கருப்புக் கொடியேற்றி எதிர்ப்பை பதிவு செய்ய வேண்டும் என திமுக தலைவர் முதல்வர் ஸ்டாலின் அழைப்பு விடுத்துள்ளார்.

இதன்பேரில் மாநிலம் முழுவதும் திமுகவினர் தொகுதி மறுவரையறை மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து கருப்புக் கொடி ஏந்தியும், வீடுகளின் முன் கருப்புக் கொடி கட்டியும், கோலமிட்டும் எதிர்ப்புகளை தெரிவித்தனர்.

இச்சூழலில் தேர்தல் பிரச்சார கூட்டத்தில் பங்கேற்பதற்காக முதல்வர் ஸ்டாலின் சேலத்தில் இருந்து நாமக்கல்லுக்கு நேற்று





இரவு வந்தார். நாமக்கல் நல்லிபாளையத்தில் உள்ள தனியார் ஹோட்டல் ஒன்றில் முதல்வர் ஸ்டாலின் தங்கினார். தொடர்ந்து நேற்று காலை நாமக்கல் நல்லிபாளையத்திற்கு கருப்பு உடை அணிந்து முதல்வர் ஸ்டாலின் வந்தார். இதனையடுத்து அங்கு செல்லப்பன் என்பவரது வீட்டின் முன் உள்ள கொடிக் கம்பத்தில் தொகுதி மறுவரை மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து கருப்புக் கொடியேற்றினார். மேலும், மசோதா நகலை தீயிட்டு எரித்தார்.

முன்னதாக தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும், வெல்வோம் எனவும் தொகுதி மறுவரையறைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் கோஷம் எழுப்பப்பட்டது.

தொடர்ந்து நாமக்கல் உழவர் சந்தைக்கு வந்த முதல்வர் ஸ்டாலின் அங்கு விவசாயிகள், மக்களிடம் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது நாமக்கல் தொகுதி திமுக வேட்பாளர் ராணி, கட்சி நிர்வாகிகள் உடனிருந்தனர்.

முதல்வர் ஸ்டாலின் பதிவு: தொடர்ந்து, நேற்று நடைபெற்ற போராட்டம் குறித்து தமிழக முதல்வர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'தமிழ்நாடெங்கும் எதிர்ப்புத்தீ பரவட்டும், பாசிச பா.ஜ.க.வின் ஆணவம் வீழட்டும். அன்று, தமிழ்நாட்டில் பற்றத் தொடங்கிய இந்தி எதிர்ப்புத் தீ டெல்லியைச் சுட்டெரித்தது. டெல்லி பணிந்த பின்பே எங்கள் தீ தணிந்தது. இன்று, தமிழரைச் சொந்த நாட்டில் அகதிகளாக்கும் கருப்புச் சட்டத்தின் நகலை எரித்து மற்றுமொரு தீயினைப் பற்ற வைத்திருக்கிறேன்.

இத்தீயும் திராவிட நாடெங்கும் பரவும். பாஜக.வின் ஆணவத்தை அடக்கிக் காட்டும். "தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய் - இன்பத் தமிழ் எங்கள் வளமிக்க உளமுற்ற தீ" எனத் தெரிவித்துள்ளார்.


# பிஹார் மாநில முதல்வராக சாம்ராட் சவுத்ரி பதவியேற்பு

**பாட்னா, ஏப்.17:**

பிஹார் மாநிலத்தில் பாஜக சார்பில் முதல் முறையாக சாம்ராட் சவுத்ரி முதல்வர் பதவியேற்றார்.

பிஹாரில் ஐக்கிய ஜனதா தளம்-பாஜக கூட்டணி ஆட்சி நடைபெற்று வந்தது. மாநிலத்தில் அரசியல் திருப்பமாக முதல்வர் நிதிஷ்குமார், கடந்த 10-ம் தேதி மாநிலங்களவை எம்.பி.யாகப் பதவியேற்றார். இதையடுத்து ஆளுநர் மாளிகைக்கு நேற்றுமுன்தினம் சென்ற நிதிஷ்குமார் தனது ராஜினாமா கடிதத்தை ஆளுநர் சையத் அடா ஹஸ்னைனிடம் அளித்தார். அன்றைய தினமே பாஜக எம்எல்ஏ-க்களின் கூட்டம் பாட்னாவில் நடைபெற்றது. அப்போது, பாஜக.வின் துணை முதல்வர் சாம்ராட் சவுத்ரி சட்டப்பேரவைக் குழுத் தலைவராக தேர்வு செய்யப்பட்டார். அன்று மாலை ஆளுநரைச் சந்தித்த சாம்ராட் சவுத்ரி தனது ஆதரவு எம்எல்ஏ.க்களின் கடிதங்களை வழங்கி ஆட்சி அமைக்க உரிமை கோரினார்.

2 துணை முதல்வர்கள்: அதன்படி பிஹார் மாநிலத்தின் புதிய முதல்வராக சாம்ராட் சவுத்ரி நேற்று பதவியேற்றார். அவருக்கு ஆளுநர் சையத் அடா ஹஸ்னைன் பதவியேற்பு பிரமாணத்தையும்ரகசியக்காப்புப் பிரமாணத்தையும் செய்து வந்தார். இதைத் தொடர்ந்து, 2 துணை முதல்வர்கள் பதவியேற்றனர். ஐக்கிய ஜனதா தளம் கட்சியைச் சேர்ந்த பிஜேந்திர பிரசாத்



யாதவ், விஜய் குமார் சவுத்ரி ஆகியோருக்கு ஆளுநர் சையத் அடா ஹஸ்னைன் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

பிஹார் மாநிலத்தில் முதல் முறையாக பாஜகவைச் சேர்ந்த ஒருவர் முதல்வராக பொறுப்பேற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்ச்சிக்குப் பிறகு சாம்ராட் சவுத்ரி கூறுகையில், "நிதிஷ்குமார் தலைமையில் இருந்த தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு செய்து வந்த திட்டங்கள் அனைத்தும் முன்னெடுத்துச் செல்லப்படும். பிரதமர் மோடி - முதல்வர் நிதிஷ்குமார் மாடலைப் பின்பற்றி பிஹாரில் ஆட்சி நடைபெறும். முதல்வர் பணியை இன்று முதல் தொடர்ச்சியாக நடத்துவேன். பிஹார் மாநிலத்தை வளர்ச்சி அடைந்த மாநிலமாக மாற்றுவதே எங்களது லட்சியம்" என்றார்.

பிஹாரில் புதிதாக பதவியேற்ற முதல்வர் சாம்ராட் சவுத்ரி, துணை முதல்வர்கள் விஜய்குமார் சவுத்ரி, பிஜேந்திர பிரசாத் யாதவ் ஆகியோருக்கு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

# மணிப்பூரில் மீண்டும் பதற்றம்: போராட்டக்காரர்கள் - பாதுகாப்பு படையினர் இடையே மோதல்



**இம்பால், ஏப்.17:**

மணிப்பூர் மாநிலம் பிஷ்ணுபூர் மாவட்டத்தில் ட்ரொங்லாபி பகுதி யில் அண்மையில் நிகழ்ந்த குண்டுவெடிப்பில் இரண்டு குழந் தைகள் உயிரிழந்தனர். இதைக்கண்டித்து திங்கெங்கே பகுதி யில் பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது, ஆயு தங்களுடன் மர்ம நபர்கள் நடமாடுவதாக தகவல்கள் பரவிய தால் அங்கு பதற்றம் அதிகரித்தது.

இதைத்தொடர்ந்து திங்கெங்கே மற்றும் நிங்தவுகாங் பகுதிகளில் போராட்டக்காரர்களுக்கும், பாதுகாப்பு படையினருக்கும் இடையே மோதல் வெடித்தது. கூட்டத்தைக் கலைக்க பாதுகாப் புப் படையினர் கண்ணீர் புகை குண்டுகளை வீசினர். இந்த மோதலில் 10-க்கும் மேற்பட்டோர் லேசான காயம் அடைந்தனர்.


போராட்டக்காரர்களால் வாகனம் ஒன்று தீயிட்டு கொளுத்தப்பட்டது. செய்யப்பட்டுள்ள இந்த வன்முறை தொடர்பாக 4 பேர் கைது செய்தனர். சட்டம் - ஒழுங்கை பராமரிக்க மறு உத்தரவு வரும் வரை பி.என். எஸ்.எஸ். சட்ட பிரிவு 163-ன் கீழ் தடை உத்தரவு பிறப் பிக்கப்பட்டுள்ளது.

# ஆந்திராவில் லாரி மீது சரக்கு வாகனம் மோதி கோர விபத்து: 5 பெண்கள் உட்பட 8 பேர் பலி

**அமராவதி, ஏப்.17:**

ஆந்திரா மாநிலம் கர்னூல் மாவட்டத்தில் நேற்று அதிகாலை பக்தர்களை ஏற்றிச்சென்ற வாகனம் டேங்கர் லாரியுடன் மோதியதில் சம்பவ இடத்திலேயே 8 பேர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. கர்னூல் மாவட்டத்தின் தர்மபூர் சுங்கச்சாவடியிலிருந்து சுமார் 9 கிலோ மீட்டர் தொலைவில் இந்த விபத்தானது நிகழ்ந்துள்ளது.

சரக்கு வாகனத்தில் சுமார் 21 பேர் மந்த்ராலயம் ஸ்ரீராகவேந்திரா சுவாமி மடத்திற்கு சென்று கொண்டிருந்தபோது எதிர் திசையில் வந்த டேங்கர் லாரியுடன் மோதியதில் இந்த விபத்து எற்பட்டு உள்ளது. இந்த விபத்தில் சம்பவ



இடத்திலேயே 5 பெண்கள், 2 ஆண்கள், சிறுமி ஒருவர் என 8 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் விபத்தில் படுகாயமடைந்தவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த விபத்து குறித்து வழக்கு பதிவு செய்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதனை தொடர்ந்து விபத்து குறித்து அறிந்த பிரதமர் மோடி உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இரங்கல் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:-

ஆந்திரப் பிரதேச மாநிலம் கர்னூல் மாவட்டத்தில் நிகழ்ந்த துயரச்சம்பவம் மிகுந்த வேதனையளிக்கிறது. தங்கள் அன்புக்குரியவர்களை இழந்தவர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையப் பிரார்த்திக்கிறேன். இச்சம்பவத்தில் உயிரிழந்த ஒவ்வொருவரின் குடும்பங்களுக்கு, பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.2 லட்சம் நிவாரண தொகையாக வழங்கப்படும். காயமடைந்தவர்களுக்கு ரூ.50,000 வழங்கப்படும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## திருப்புவனம் இளையான்குடி பகுதியில் தொகுதி மறுவரை மசோதாவை நிறைவேற்றும் மத்திய அரசை கண்டித்து கருப்பு கொடி ஏந்தி திமுக போராட்டம்




**சிவகங்கை, ஏப்.17 :** சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் பேரூராட்சி பகுதியில் மாவட்ட திமுக துணைச்செயலாளர் பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன் தலைமையில் திமுக வேட்பாளர் தமிழரசி எம்எல்ஏ தொகுதி மறுவரை செய்யும் மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றும் மத்திய அரசை கண்டித்து கருப்பு கொடி ஏந்தி போராட்டம் நடத்தினார்கள். இதேபோல் இளையான்குடி வடக்கு ஒன்றியம் சார்பில் ஒன்றிய செயலாளர் முன்னாள் எம்எல்ஏ சுப. மதியரசன், கூட்டுறவு வங்கி முன்னாள் தலைவர் சுப தமிழரசன் ஆகியோர் தங்கள் வீடுகளில் கருப்பு கொடி ஏந்தி போராட்டம் நடத்தினார்கள். பல கிராமங்களில் வீடுகள் தோறும் திமுக நிர்வாகிகள் கருப்பு கொடி ஏற்றி போராட்டம் செய்தனர்.

## மகளிர் முன்னேற்றத்துக்காக ஏராளமான திட்டங்களை நிறைவேற்றியது திராவிட மாடல் அரசு– கமல்ஹாசன்



**சென்னை, ஏப்.17:** மக்கள் நீதி மய்யத் தலைவரும், எம்.பி.யுமான கமல்ஹாசன் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வேட்பாளர்களை ஆதரித்து மாபெரும் மகளிர் பேரணி நேற்று சேலம் மாநகரில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் என் அன்புக்குரிய நண்பர், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் பொதுச் செயலாளர், விருத்தாச்சலம் சட்டமன்றத் தொகுதியின் வெற்றி வேட்பாளர் பிரேமலதா மற்றும் அமைச்சர் பெருமக்களோடு கலந்து கொண்டேன்.

### ஊட்டி மலைப்பாதையில்

## கேரள சுற்றுலா கார் கவிழ்ந்து விபத்து அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பிய பயணிகள்



**ஊட்டி, ஏப்.17:** கேரள மாநிலத்தை சேர்ந்தவர்கள் நீலகிரி மாவட்டத்திற்கு சுற்றுலா செல்வது என்று முடிவெடுத்தனர். பின்னர் அவர்கள் ஒரு காரில் புறப்பட்டு வந்தனர்.

ஊட்டி கோத்தகிரி மலைபாதையில் நள்ளிரவு நேரத்தில் அந்த கார் சென்று கொண்டு இருந்தது. அப்போது மடித்துறை அருகே டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த கார், நிலைதடுமாறி சாலையோரத்தில் தலைகுப்புற கவிழ்ந்தது.

இதனால் அந்த வண்டியில் இருந்த பயணிகள் காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள் என்று கூச்சலிட்டனர். ஆனாலும் நள்ளிரவு என்பதால் உதவிக்கு யாரும் வரவில்லை. பின்னர் அவர்கள் கவிழ்ந்து கிடந்த வண்டிக்குள் இருந்து காயமின்றி பத்திரமாக வெளியேறினர். இந்த விபத்தில் சுற்றுலா வாகனம் பலத்த சேதம் அடைந்தது.

நீலகிரி மாவட்டம் மலைப்பகுதியாக இருப்பதால், இங்கு வரும் வாகன ஓட்டிகளுக்கு சாலையின் வளைவுகள், குறுகிய பாதைகள் மற்றும் திடீர் இறக்கங்கள் ஆகியவை குறித்து முழுமையாக தெரிவது இல்லை.

இதுதான் மலைப்பாதையில் சாலை விபத்துகளுக்கு முக்கிய காரணமாக உள்ளது. மேலும் இரவு நேரங்களில் பார்வைத்திறன் குறைவதும், அதிவேகத்தில் வாகனங்கள் இயக்கப்படுவதும் விபத்து அபாயத்தை அதிகரிப்பதாக உள்ளன.

நீலகிரி மலைப்பாதையில் சாலை விபத்துகள் தொடர்வது குறித்து போலீஸ் அதிகாரிகள் கூறுகையில், சமவெளி பகுதியில் இருந்து மலைப்பாதைக்கு வரும் வாகனஓட்டிகள் மிகுந்த கவனத்துடன் வாகனங்களை மெதுவாகவும் கட்டுப்பாட்டுடனும் இயக்க வேண்டும்.

வளைவுகளில் ஹாரன் ஒலித்தபிறகே பயணத்தை தொடர வேண்டும். இரவு நேரங்களில் தேவையற்ற வேகத்தை தவிர்ப்பது அவசியம்.

மேலும் புதியதாக வரும் சுற்றுலா பயணிகள் உள்ளூர் சாலை நிலைமை குறித்து முன்கூட்டியே அறிந்து கொண்டு பயணம் செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தி உள்ளனர்.

## பந்தளம் அரச குடும்பத்தினருடன் பாண்டியர்கள் தேடி பயணம் ஆய்வுக் குழு முக்கிய சந்திப்பு



**மதுரை, ஏப். 17:** பாண்டியர்களின் வரலாற்றைத் தேடி நடைபெற்று வரும் ஆய்வுப் பயணத்தில், மேலும் ஒரு முக்கிய கட்டமாக, “பாண்டியர்கள் தேடிப் பயணம்” வரலாற்று ஆய்வுக் குழுவினர் பந்தளம் தேசத்தின் அரச குடும்பத்தினருடன் நேற்று முக்கியமான சந்திப்பை மேற்கொண்டனர்.

இந்த சந்திப்பு, வரலாற்று ஆய்வு தொடர்பான ஆலோசனைகள் மற்றும் மரியாதை நிமித்தமான உரையாடல்களுடன் சிறப்பாக அமைந்தது.

இந்நிகழ்வில் பந்தளம் தம்புரான் ஸ்ரீநாராயண வர்மா, ஸ்ரீசுரேஷ் வர்மா,ஸ்ரீ பிரதாப் வர்மா, ஸ்ரீ தீபா வர்மா ஆகியோர் கலந்து கொண்டனர். பாண்டியர்கள் தேடிப் பயணம் வரலாற்று ஆய்வுக் குழுவின் தலைமை ஆய்வாளர் மணிகண்டன் அவர்கள் தலைமையில் குழுவினர் பங்கேற்று, பாண்டியர்களின் வரலாற்று ஆதாரங்கள், மரபு தொடர்புகள் மற்றும் தென்னிந்திய அரச மரபுகளின் பரம்பரை குறித்து விரிவான கருத்துகளை பகிர்ந்து கொண்டனர்.

சிறப்பாக, பந்தளம் அரச குடும்பம் பாண்டியர்களின் கிளை வம்சத்துடன் தொடர்புடையதாக கருதப்படும் வரலாற்று நோக்கங்கள் குறித்து இச்சந்திப்பில் முக்கியமான பரிமாற்றங்கள் நடைபெற்றன.

தென்னிந்திய அரச மரபுகளில் காணப்படும் ஒற்றுமைகள் மற்றும் பரம்பரை தொடர்புகள் குறித்து இரு தரப்பினரும் தங்களது கருத்துகளை பகிர்ந்து கொண்டனர்.

நிகழ்வின் முக்கிய அம்சமாக, பாண்டியர்களின் பாரம்பரிய அரச சின்னமான “மீன் சின்னம்” பந்தளம் தம்புரான் ஸ்ரீ நாராயண வர்மா அவர்களுக்கு மரியாதையாக வழங்கப்பட்டது. இந்த பரிசளிப்பு, பாண்டியர் மற்றும் பந்தள அரச மரபுகளுக்கிடையேயான வரலாற்று மற்றும் வம்சாவளி தொடர்பை வலுப்படுத்தும் அடையாளமாகக் கருதப்படுகிறது.

மேலும், பாண்டியர் அருங்காட்சியகம் உருவாக்கம் மற்றும் பாண்டியர் வரலாற்றை உலகிற்கு தொகுத்து வெளிப்படுத்தும் முயற்சிகளுக்கு தாம் உறுதுணையாக இருப்பதாக தம்புரான் ஸ்ரீ நாராயண வர்மா அவர்கள் உறுதியளித்ததாக தெரிவிக்கப்பட்டது. இது ஆய்வுக் குழுவினருக்கு பெரும் ஊக்கமாக அமைந்துள்ளது.

அதோடு, பழமையான ஆவணங்கள், கல்வெட்டுகள், மரபு வழித் தகவல்கள் மற்றும் வாய்மொழி வரலாறுகளை சேகரித்து ஒருங்கிணைக்கும் பணியில் இணைந்து செயல்பட வேண்டும் என்ற கருத்தும் இரு தரப்பினரிடையே வலியுறுத்தப்பட்டது.

இந்த சந்திப்பு, பாண்டியர்களின் தொன்மையான வரலாற்றை ஆழமாக ஆய்வுசெய்து மறைந்திருக்கும் உண்மைகளை வெளிக்கொணரும் முயற்சியில் முக்கிய முன்னேற்றமாக பார்க்கப்படுகிறது.

மேலும் எதிர்காலத்தில் இத்தகைய கூட்டணிகள் அதிகரித்து, தென்னிந்திய வரலாற்றின் மறைக்கப்பட்ட பல பரிமாணங்கள் வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்படும் என்ற நம்பிக்கையும் எழுந்துள்ளது.

## காட்டுமன்னார்கோவிலில் மணமேடையாக மாறிய பிரசார மேடை



**கடலூர், ஏப்.17:** கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில் செட்டி தெருவில் வி.சி.க. வேட்பாளரை ஆதரித்து விடுதலை சிறுத்தை கட்சியின் தலைவர் திருமாவளவன் நேற்று இரவு கூட்டத்தில் பேசினார்.

அப்போது திடீரென குமராட்சி ஒன்றிய வி.சி.க. பொருளாளர் நடுத்திட்டை சேர்ந்த சங்கர், செல்வராஜன் பேட்டை கிராமத்தைச் சேர்ந்த சுஸ்ரீ என்பவருடன் கழுத்தில் மாலையுடன் திருமண கோலத்தில் மேடைக்கு வந்தார்.

அப்போது சங்கர், தனக்கு இந்த மேடையில் திருமணம் செய்து வைக்குமாறு திருமாவளவனிடம் கேட்டுக்கொண்டார்.

அந்த தொண்டரின் வேண்டுகோளை ஏற்று திருமாவளவன், மணமக்களுக்கு திருமாங்கல்யத்தை எடுத்து கொடுத்து திருமணத்தை நடத்தி வைத்தார். அதன் பின்னர் மணமக்களுக்கு அச்சதை தூவி வாழ்த்தினார். இதனால் தேர்தல் பிரசார மேடை திருமண மேடையாக மாறியது. இந்த சம்பவம் பொதுமக்களிடையே மகிழ்ச்சியும், ஆச்சரியத்தையும் வெளிப்படுத்தியது. திருமாவளவன், தொண்டர்கள் மீது வைத்த பற்றினை இந்த சம்பவம் எடுத்து காட்டுவதாக அமைந்தது.

## பா.ஜ.க. சர்வாதிகாரியாக இருக்க பார்க்கிறது - அமைச்சர் துரைமுருகன்



**வேலூர், ஏப்.17:** தொகுதி மறுவரையறைக்கு எதிர்ப்பு தெரிவித்து நாமக்கல் மாவட்டம் நல்லிபாளையத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கருப்பு ஆடை அணிந்து கருப்புக்கொடி ஏற்றினார்.

தொகுதி மறுவரையறை மசோதாவின் நகலை எரித்து முதலமைச்சர் தலைமையில் திமுகவினர் போராட்டம் நடத்தினர். மத்திய பாஜக அரசின் மோசடியாக மசோதாவை இறுதி வரை எதிர்ப்போம் என முழக்கமிட்டனர்.

இந்நிலையில், தி.மு.க. பொதுச் செயலாளரும், அமைச்சருமான துரைமுருகன் மத்திய அரசை கண்டித்து காட்பாடியில் உள்ள அவரது வீட்டில் கருப்பு கொடி கட்டியதுடன் கருப்பு கொடியை கையில் ஏந்தி மத்திய அரசை கண்டித்து பாராளுமன்ற தொகுதி மறுசீரமைப்பை எதிர்த்து போராட்டத்தில் ஈடுபட்டார்.

துணை மேயர் சுனில் குமார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சரவணன், பகுதி கழக செயலாளர் பரமசிவம் உள்ளிட்ட தி.மு.க நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். அப்போது துரைமுருகன் கூறியதாவது:-

தேர்தல் நேரத்தில் அவசரமாக பாராளுமன்ற கூட்டத்தைக் கூட்டுவது குறித்து அவர்களிடம் தான் நீங்கள் கேள்வி கேட்க வேண்டும். அ.தி.மு.க., பா.ஜ.க. வலையில் மாட்டிக் தொகுதி மறுவரையறை மசோதாவுக்கு விஜய் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். அவர் யாரிடமும் இன்னும் அகப்படவில்லை. அதனால் பேசுகிறார். தொகுதி மறுவரையறையை பா.ஜ.க. உள்நோக்கத்துடன் செய்வதற்கு காரணம் எந்த மாநிலத்தின் தயவும் இல்லாமல் சட்டங்களை இயற்றவும், திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் மத்திய அரசு தான் நினைத்ததை செய்கிறது. இதன் மூலம் பா.ஜ.க. ஜனநாயகத்தை குழி தோண்டி புதைத்து விட்டு சர்வாதிகாரியாக இருக்க பார்க்கிறது.

தொகுதி மறுவரையறை மசோதா குறித்து இதே நிலை நீடித்தால் மக்கள் போராடுவார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

## பழனிசாமி என்னை வாழ்த்தியதை உலக அதிசயமாக பார்க்கிறேன்– ஓ.பன்னீர்செல்வம்



**தேனி, ஏப்.17:** தேனி மாவட்டத்தில் தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ,இன்று பிரசாரம் செய்கிறார்.

இதற்கான பொதுக்கூட்டம் ஆண்டிபட்டி க.விலக்கு சாலையில் உள்ள பிராதுகாரன் பட்டியில் நடக்கிறது. இதையடுத்து அங்கு செய்யப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகளை முன்னாள் முதலமைச்சரும், போடி தொகுதி தி.மு.க. வேட்பாளருமான ஓ.பன்னீர் செல்வம் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அப்போது அவர் நிருபர் களுக்கு அளித்த பேட்டியில்,

ஆண்டிபட்டி பிரசாரத்தின் போது எடப்பாடி பழனிசாமி என்னை எங்கிருந்தாலும் வாழ்க என்று கூறியுள்ளார். இதுகுறித்து நான் கேட்ட போது உலகில் உள்ள அதிசயங்களில் ஒன்றாக பார்க்க தோன்றியது. தேனி மாவட்டம் அ.தி.மு.க.வின் கோட்டை என்பது பழைய வரலாறு. கோட்டையில் ஓட்டை விழுந்து பல நாட்கள் ஆகிவிட்டது.

### களக்காட்டில்

## விவசாயிகள் தேர்தல் புறக்கணிப்பு அறிவிப்பு






**நெல்லை, ஏப்.17:** நெல்லை மாவட்டம் களக்காடு சுற்று வட்டார பகுதிகளில் காட்டுப்பன்றி கடமான், கரடி, யானை உள்ளிட்ட வனவிலங்குகள் விவசாய நிலங்களில் புகுந்து பயிர்களை சேதப்படுத்தி அட்டகாசம் செய்து வருகின்றனர்.


விளைநிலங்களுக்குள் புகும் காட்டு பன்றிகளை சுட்டுக் கொல்ல தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. ஆனால் பன்றிகளை சுடும் பணியில் வனத்துறையினர் சுணக்கம் காட்டி வருவதாகவும், இதனால் நாளுக்கு நாள் வனவிலங்குகள் அட்டகாசம் அதிகரித்து வருவதாகவும் விவசாயிகள் புகார் தெரிவித்து வருகின்றனர்.

இதுபோல வன விலங்குகள் நாசம் செய்யும் பயிர்களுக்கும் இழப்பீடு வழங்கப்படுவதில்லை என்றும் விவசாயிகள் புகார் கூறுகின்றனர்.

இதனை கண்டித்தும், வனவிலங்குகள் அட்டகாசத்தை கட்டுப்படுத்த கோரியும் களக்காடு விவசாயிகள் வருகிற சட்டமன்ற தேர்தலை புறக்கணிக்க போவதாக களக்காடு விவசாயிகள் பாதுகாப்பு குழு தலைவர் தாவீது அறிவித்துள்ளார். இதுதொடர்பாக அப்பகுதியில் சுவரொட்டிகளும் ஒட்டப் பட்டுள்ளது.

### ஜோலார்பேட்டை அருகே

## மாணவியை தற்கொலைக்கு தூண்டியதாக 3 பேர் கைது



**ஜோலார்பேட்டை., ஏப்.17:** ஜோலார்பேட்டை அருகே சக்கரகுப்பம் மாரியம்மன் கோவில் தெருவை சேர்ந்தவர் ரஜினி (வயது 41). ஆட்டோ டிரைவர்.

இவரது மகள் தர்ஷினி (16), இவர் வக்கணம்பட்டி பகுதியில் உள்ள அரசு பள்ளியில் 10-ம் வகுப்பு படித்து பொதுத்தேர்வு எழுதி உள்ளார். அதே பகுதியை சேர்ந்த வாலிபருடன் காதல் ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் பேசிக் கொண்டிருப்பதாக தெரிகிறது. இதனை அறிந்த தந்தை தனது மகளிடம் கேட்டார். நான் அது போன்று யாரையும் காதலிக்கவில்லை என்று கூறினார்.

இந்த நிலையில் ரஜினி குடும்பத்தார் தனது வீட்டின் வெளியே நின்று கொண்டு பேசிக்கொண்டு இருந்தனர். அப்போது அங்கு வந்த வாலிபர் மற்றும் இவரது தாய், சகோதரி ஆகிய 3 பேரும் தர்ஷினி குடும்பத்தினரை தகாத வார்த்தையால் பேசினர். திடீரென தர்ஷினியை தாக்கினர்.

## பா.ஜ.க.–அ.தி.மு.க. கூட்டணியை வீட்டுக்கு அனுப்புவோம்– உதயநிதி ஸ்டாலின்



**மதுரை, ஏப்.17:** மதுரை மாவட்டம் திருமங்கலத்தில் தி.மு.க. இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் பிரசாரம் மேற்கொண்டார்.

அப்போது அவர் பேசியதாவது:-

மதுரைக்கு வந்தாலே எப்போவுமே தனி எனர்ஜி தான், தனி கெத்துதான். அவ்வளவு பாசக்கார பயலுக நீங்கள். பொதுவாக மதுரை மக்களை பற்றி பேசும் போது உங்களிடம் பாசம் அதிகமாக இருக்கும்.

அதிகமாக இருந்தாலும் அதில் எந்தவித போலித்தனமும் இருக்காது. எல்லாம் உண்மையான பாசமும், அன்பும் கொண்டவர்கள் மதுரை மக்கள். அதனால் வரும் தேர்தலில் உங்கள் உண்மையான பாசத்தினை தி.மு.க. மற்றும் கூட்டணி வேட்பாளர்களிடம் காட்டுங்கள். நியாயமான கோபத்தினை அ.தி.மு.க. மீது காட்டுங்கள்.

மதுரை எம்யிஸ் மருத்துவமனைக்கு 2015-ம் ஆண்டு அடிக்கல் நாட்டினர். ஆனால் 11 ஆண்டுகளாகியும் இதுவரை கட்டி முடிக்கவில்லை. 2021-ல் தேர்தல் பிரசாரத்தின் போது எய்ம்ஸ் மருத்துவமனை கட்ட 4 செங்கல் மட்டும் வைத்திருந்தார்கள். அப்போது அந்த செங்கலை காட்டி பிரசாரம் செய்தேன். அன்றிலிருந்து தற்போது 5 வருடங்களாகியும் எய்ம்ஸ் மருத்துவமனை இன்னும் கட்டி முடிக்கவில்லை. ஆனால் திராவிட மாடல் அரசு 10 மாதத்திலேயே கலைஞர் நூலகத்தை பிரமாண்டமாக கட்டி முடித்து முதலமைச்சர் திறந்து வைத்தார்.

மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையை ஒன்றிய பா.ஜ.க. அரசு இஞ்ச் இஞ்சாக செதுக்கி வருகின்றனர். தமிழ்நாடு என்றாலே பா.ஜ.க. அரசுக்கு அலட்சியம்தான். அப்படிப்பட்ட பா.ஜ.க.வுடன் தான் இன்று எடப்பாடி பழனிசாமி கூட்டணி வைத்து உள்ளார். மோடி, அமித்ஷாவுக்கு எடப்பாடி பழனிசாமி முரட்டு அடிமையாக உள்ளார்.

இந்த சட்டமன்ற தேர்தலில் தமிழ்நாடு அணியா, டெல்லி அணியா என்று பார்த்துவிடுவோம். கடந்த தேர்தலில் சொன்னதை நிறைவேற்றியுள்ளோம். மகளிர் உரிமைத்தொகை ஆயிரம் ரூபாயிலிருந்து இரண்டாயிரமாக உயர்த்தி தருவோம்.

தேர்தலுக்கு இன்னும் சில நாட்கள் தான் உள்ளது. தி.மு.க. தொண்டர்கள் ஒவ்வொரு வாக்காளரையும் சந்தித்து சங்கி கூட்டங்களை பற்றி சொல்லுங்கள். அவ்வாறு செய்தால் ஐம்பதாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறலாம். சட்டமன்ற தேர்தலில் தோல்வியடைய செய்து பா.ஜ.க.-அ.தி.மு.க. கூட்டணியை வீட்டிற்கு அனுப்புவோம்.

இவ்வாறு அவர் பேசினார்.




திருப்பூர் ரியல் எஸ்டேட் விற்பனை
சிறந்த முதலீட்டு வாய்ப்பு
PREMIUM PLOT SALE
Tiruvallur to Oothukottai Highway NH on Rd Site
VGP THIRU NAGAR, PHASE-1
Location: (Nr Mylapore Jn)
Direction: N/ Face
Total Area: 2400 sft
Price: RS.650/sft
LIMITED PLOTS AVAILABLE!
Contact Us: 9445315510 / 9283257193
VGP Developers - Your Trusted Partner




ADVERTISE WITH US
CONTACT US
9438610756




WANTED:
FEMALE ANCHORS
Age 18 to 35
Good Looking
Work from Home
(Full-time/Part-time)
Salary: Rs. 20,000 to 50,000
Call / Whatsapp:
7789941009
9337501889

! WANTED !
Muslim Lady
Accounts Assistant
Qualification: B.Com / Tally Knowledge Required
Company: Perfume Manufacturing Company
Location: Chrompet
Contact: 99401 46318




WANTED
IMMEDIATE OPENINGS AVAILABLE!
HOUSEKEEPING STAFF (Male & Female)
MARKETING EXECUTIVE – ELECTRICAL FIELD (Male & Female)
ELECTRICIAN & HELPERS (Weekly / Monthly Wages)
ELECTRICAL SUB-CONTRACTOR
DRIVER
GOOD SALARY | FLEXIBLE WORK OPTIONS | IMMEDIATE JOINING
CONTACT NOW: 9363133253
HURRY! LIMITED VACANCIES AVAILABLE!




Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com




keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology – Freshers
Internship:
Clinical Training
Counseling Practice
Case Work
Jobs:
Social Worker
Jr Psychologist
Rehab Counselor
Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com




WANTED
ஆட்கள் தேவை
சமையல்
வீட்டுவேலை
குழந்தை
நோயாளி
தங்கி
தங்காமல்
சென்னையில் தங்கி / தங்காமல் வேலை செய்யலாம்
தொடர்புக்கு 8148215778 8248610592
A trustworthy help service for Chennai families




GREEN HOUSING & PROPERTIES
மண்ணும் பொன்னும்
சிறுசேமிப்பு திட்டம் 50 - 50 EMI
OFFER PRICE
ரூபாய் ₹ 1.80 லட்சம்
800 SQFT
FREE FREE!!!
10 கிராம் GOLD COIN சேமியுங்கள்
VILLA PLOTS FOR SALE
BOOK NOW
+91 77083 95118




ATTENTION
ரயில்வே மின்சார ஒப்பந்த பணிக்கு
10th., ITI Electrical B- Licence, Dip EEE தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புக்கு:- 9094176404/ 7904974247.




சம்பிரதாய தாம்பூல பாக்கு! பூஜைக்கு உகந்த பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
அஜந்தா பாக்கு
தீபாவளி
RAVIKUMAR AND COMPANY




குன்னத்தோழு
உடனடி வேலைவாய்ப்பு
WANTED
டெல்டா டைமண்ட் டூல்ஸ்
சென்னை - குன்றத்தூர்
உதவியாளர் (HELPER)
டர்னர் (TURNER)
அடிப்படை அறிவு, உடல் தகுதி, அனுபவம் தேவையில்லை
டர்னர் தொழில்முறை அனுபவம் தேவை, வரைபடங்கள் படித்தல்
தகுதி: 10வது / ITI (FITTER/TURNER)
வயது வரம்பு: 18-35
சம்பளம்: நல்ல ஊதியம் + கூடுதல் நன்மைகள்
தொடர்புக்கு / For Details:
pH: 9841738379




just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com




Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com




SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081.




THANIGAI
WANTED ISO
REAL ESTATE MARKETING
PART TIME & FULL TIME
Flexible work
No Age Limit /No Investment
No Experience/No Qualification
No Risk / No Target
Simple work – just refer customers only
Office Location : Near Perambur Railway Station
K. Ramakrishnareddy 90879 55111




அருள்தரும் தெய்வம்
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..
www.arultharumdeivam.com




WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872



# கவிதை அரங்கம்!



மழையில் நனைந்த
பூக்களை விட, உன்
கோபமே எனக்குப்
பிடிக்கும்.

வானவில்லின் வர்ணங்கள்
எல்லாம் உன் ஆடையில்
வந்து அமர்ந்தனவோ?

உன் கூந்தல் அசைவில்,
என் கவலைகள் எல்லாம்
கலைந்து போகின்றன.

பேசித் தீராத கதைகள்
நம்மிடம் இருந்தாலும்,
உன் மௌனமே எனக்குப்
புரியும்.

நீ தொடும் ஒரு
விரல் நுனியில், என்
ஒட்டுமொத்த நரம்புகளும்
மீட்கப்படுகின்றன.

# வாழ்க்கை தத்துவம்...



உன்னைத் தவிர்
யாராலும் உன்னை
மகிழ்விக்க முடியாது

மகிழ்ச்சி என்பது நாம்
சேர்த்து வைக்கும்
பொருட்களில் இல்லை
நல்ல மனிதர்களை
சேமிப்பதில் உள்ளது

விழுந்து விழுந்து சிரியுங்கள்
ஆனால் விழுந்தவனைப்
பார்த்து சிரிக்காதீர்கள்

# அவள் பெயர் மித்ரா



அம்மா, அப்பா இருவரும் அவளை உயிருக்கு மேலாக நேசித்தவர்கள். ஆனால் அவர்களுடைய நேசத்திற்கு ஒரு எல்லை இருந்தது. அதனால் அவள் காதல் திருமணம் ஏற்கப்படவில்லை. மித்ராவை காதலித்தவன் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவன்.

"நீ படிச்ச பொண்ணு... நல்ல குடும்பம் பார்த்து நாங்களே கல்யாணம் பண்ணி வைக்கிறோம்" அப்பாவின் வார்த்தைகள் முடிவாக விழுந்தது. அவள் அழுதாள். வாதாடினாள். அவளுடைய காதல் தவறில்லை என்று விளக்கினாள். ஆனால் "எங்களுக்கு அந்தப் பையன் வேண்டாம்" அந்த ஒரு வரி திரும்ப திரும்ப கூறப்பட்டது.

மித்ரா வீட்டை விட்டு ஓடவில்லை. காதலனை விட்டு உடனே விலகவும்

இல்லை. அவள் செய்தது ஒன்று மட்டுமே — தன்னை வலுப்படுத்திக்கொள்ள தீர்மானித்தாள். படிப்பு முடிந்ததும், சென்னையில் ஒரு வேலை கிடைத்தது. அம்மாவின் அக்கா வீட்டில் தங்க ஏற்பாடு செய்யப்பட்டது. "கொஞ்ச காலம் தாங்கிக்கோ... எல்லாம் சரியாகும்" அம்மாவின் குரலில் கவலை இருந்தது.

சென்னை அவளுக்கு எளிதாக இல்லை. புதிய வேலை, புதிய முகங்கள், இரவில் தனிமை, பகலில் பொறுப்பு. அந்த நாட்களில் தான் கர்த்திக் அவளை சந்தித்தான். மிகவும் சகஜமாக பழகினாள். ஆனால் அவள் வேலை இடத்தில் அடிக்கடி அமைதியாக இருப்பாள். ஒருநாள் திடீரென்று உடைந்து அழுதாள். அவளுடைய காதல், அவளுடைய பயம்,

அவளுடைய குற்ற உணர்ச்சி — எல்லாவற்றையும் கார்த்திக்கிடம் சொல்லி அழுதாள். அவன் உடனே, மித்ரா இது காதல் தோல்வி இல்ல. நீ உன்னை உன் பெற்றோர்களிடம் நிரூபிக்க வேண்டிய ஒரு கட்டம் என்று சொன்னான். அவள் மெதுவாக மாற ஆரம்பித்தாள். வேலையில் கவனம், திறமையை வளர்த்துக் கொண்டாள். தன்னை தாழ்த்திக் கொள்ளும் பழக்கத்தை விட்டாள். காலம் அவளுக்கு பதில் சொல்லத் தொடங்கியது. பதவி உயர்வு. மதிப்பு. தன்னம்பிக்கை.

ஒருநாள் அவள் சொன்னாள்: "இப்போ நான் என்னை இழக்கல. எனக்கு நான் இருக்கேன்." அந்த வார்த்தையில் வெற்றி இருந்தது. காதல் இன்னும் அவள் மனதில் இருந்தது. அது அவளை பலவீனப்படுத்தவில்லை.

ஒரு நாள், அவள் பெற்றோர் சென்னைக்கு வந்தார்கள். அவர்கள் முன்னால் நின்றிருந்தது மித்ரா என்ற தன்னம்பிக்கை நிறைந்த ஒரு பெண். அப்பா அமைதியாக சொன்னார்: "நீ நல்லா இருக்கே..." இனி உன் வாழ்க்கையில நீ ஜெயிச்சுடுவ. போய் அந்த பையனை கூட்டிட்டு வா. பேசலாம் என்றார். அவள் சிரித்தாள். அந்த சிரிப்பில் பழிவாங்கல் இல்லை. வலி இல்லை. வெற்றி மட்டும்.

மித்ரா வாழ்க்கையில் வென்றாள். காதலால் அல்ல, தன்னை நம்பியதால்.

**கோமளவல்லி**
மும்பை



# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!

மனைவி: "ஏங்க, என்னைப் பார்த்தா உங்களுக்கு எப்படித் தெரியுது?"
கணவன்: "எனக்கு என்ன தெரியுதுன்னு முக்கியம் இல்ல, உனக்கு என்ன தெரியுதுங்கறது தான் முக்கியம்!"

மனைவி: "நான் செத்தா நீங்க என்ன பண்ணுவீங்க?"
கணவன்: "நிம்மதியா இருப்பேன்... ச்சே, ச்சே... நிம்மதியா இருப்பேன்னு சொன்னேனா, தியானம் பண்ணுவேன்னு சொல்ல வந்தேன்!"



# தினம் ஒரு சமையல்



## வரமிளகாய் சட்னி

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| 30 | -சின்ன வெங்காயம் |
| 30 பற்கள் | -பூண்டு |
| 2 | -தக்காளி |
| 15 | -காய்ந்த மிளகாய் |
| எலுமிச்சை அளவு | -புளி |
| 1 டீஸ்பூன் | -கடுகு |
| 1/2 டீஸ்பூன் | -பெருங்காயத்தூள் |
| தேவையான அளவு | -உப்பு |
| தேவையான அளவு | -எண்ணெய் |

செய்முறை:



மிக்சியில் சின்ன வெங்காயம் பூண்டு தக்காளி சேர்க்கவும்.

பின்னர் அதில் புளி காய்ந்த மிளகாய் உப்பு சேர்த்து நைஸாக அரைக்கவும்.

கடாயில் எண்ணெய் ஊற்றி கடுகு பெருங்காயத்தூள் அரைத்த விழுதை சேர்த்து நன்றாக கிளறவும்.

எண்ணெய் பிரிந்து வரும் வரை வதக்கி பின்னர் இறக்கவும். இப்போது சுவையான வரமிளகாய் சட்னி ரெடி.

# அருகம்புல் பயன்கள்



அருகம்புல் (ARUGAMPUL) ஒரு சிறந்த மருத்துவக் குணங்கள் நிறைந்த மூலிகை. இது இரத்தத்தைச் சுத்தப்படுத்தி, உடலுக்குத் தேவையான வைட்டமின் A, C, மெக்னீசியம், கால்சியம் போன்ற சத்துக்களை வழங்குகிறது. தினமும் வெறும் வயிற்றில் அருகம்புல் சாறு குடிப்பது சர்க்கரை நோய், உடல் பருமன், மலச்சிக்கல், இரத்த சோகை மற்றும் சிறுநீரகப் பிரச்சனைகளுக்குச் சிறந்த தீர்வாக அமைகிறது.

அருகம்புல்லின் முக்கிய பயன்கள்:

இரத்த சுத்திகரிப்பு: உடலிலுள்ள நச்சுக்களை வெளியேற்றி, இரத்தத்தை சுத்தப்படுத்துகிறது. இரத்த சோகையை நீக்கி, ஹீமோகுளோபின் அளவை அதிகரிக்கிறது.

சர்க்கரை நோய் கட்டுப்பாடு: வெறும் வயிற்றில் அருகம்புல் சாறு குடிப்பது சர்க்கரை அளவை சமநிலையில் வைக்க உதவுகிறது.

உடல் எடை குறைப்பு: உடல் பருமனை குறைத்து, வளர்சிதை மாற்றத்தை (METABOLISM) சீராக்குகிறது.

வயிற்று கோளாறுகள்: மலச்சிக்கல், வயிற்றுப் புண் (ULCER) மற்றும் அசிடிட்டி பிரச்சனைகளை தீர்க்கிறது. வாய் துர்நாற்றத்தையும் நீக்குகிறது.

சிறுநீரக ஆரோக்கியம்: சிறுநீரகப் பாதையில் ஏற்படும் தொற்று மற்றும் சிறுநீரக கற்களை கரைக்க உதவுகிறது.

நோய் எதிர்ப்பு சக்தி: உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து, புத்துணர்வு அளிக்கிறது.

எப்படி பயன்படுத்துவது?

தூய்மையான அருகம்புல்லை பறித்து, நன்கு கழுவி, சாறு எடுத்து (சிறிது எலுமிச்சை அல்லது தேன் கலந்து) காலையில் வெறும் வயிற்றில் குடிக்கலாம். சாறு குடித்த பிறகு சுமார் 2 மணி நேரம் வரை வேறு உணவுகளை உட்கொள்வதைத் தவிர்க்க வேண்டும்.

# சினிமா

# வெளிநாட்டில் LIK திரைப்படம் இதுவரை செய்துள்ள வசூல்.. பல கோடி நஷ்டம் ஏற்படுமா?



பிரதீப் ரங்கநாதன் நடிப்பில் கடந்த வாரம் வெளிவந்துள்ள திரைப்படம் Love Insurance Kompany. இப்படத்தை இயக்குநர் விக்னேஷ் சிவன் இயக்க, அனிருத் இசையமைத்திருந்தார்.

இப்படத்தில் க்ரித்தி ஷெட்டி, எஸ்.ஜே. சூர்யா, கௌரி ஜி. கிஷன், சீமான், ஷா ரா ஆகியோர் நடித்திருந்தனர். வித்தியாசமான கதைக்களத்தில் உருவாகி வெளிவந்த இப்படத்தின் மீது அதீத எதிர்பார்ப்பை ரசிகர்கள் வைத்திருந்தனர்.

ஆனால், இப்படம் ரசிகர்களின் எதிர்பார்ப்பை முழுமையாக பூர்த்தி செய்யவில்லை. இதனால் கலவையான விமர்சனங்களை எதிர்கொண்டு வருகிறது.

பல கோடி நஷ்டம் ஏற்படுமா

இந்த நிலையில், LIK திரைப்படத்தின் வெளிநாட்டு வசூல் விவரங்கள் வெளியாகியுள்ளது. இதில் இதுவரை இப்படம் ரூ. 9.3 கோடி வசூலித்துள்ளது. ஆனால், இப்படம் ரூ. 22 கோடி வசூல் செய்தால் மட்டுமே லாபத்தை எட்டும் என்கின்றனர். இதே போல் வரும் நாட்களிலும் வசூல் செய்தால், இப்படம் வெளிநாட்டில் நஷ்டத்தை சந்திக்கும் என கூறப்படுகிறது.



தனது லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்களை தனது இன்ஸ்டா பக்கத்தில் பதிவு செய்துள்ளார். இந்த புகைப்படங்கள் தற்போது வைரலாகி வருகின்றன. இதோ அந்த புகைப்படங்கள்:

# ஜனநாயகன் படத்தை ஒளிபரப்பிய லோக்கல் சேனல்.. போலீஸ் எடுத்த நடவடிக்கை





விஜய் நடித்த ஜனநாயகன் படம் சென்சார் பிரச்சனை காரணமாக ரிலீஸ் ஆகாமல் இருந்த நிலையில் திடீரென முழு படமும் இணையத்தில் பைரஸி தளங்களில் லீக் ஆனது. அது பற்றி தயாரிப்பு நிறுவனம் அளித்த புகாரை தொடர்ந்து சைபர் க்ரைம் போலீசார் 6 பேரை கைது செய்து இருக்கின்றனர்.

படம் லீக் ஆனது எப்படி என்ற கேள்விக்கு பதில் தெரியாத நிலையில் அது பற்றி தீவிர விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் கோவையில் சோமனூர் மற்றும் கருமத்தம்பட்டி போன்ற இடங்களில் ஒளிபரப்பாகி வரும் ராசி என்ற லோக்கல் கேபிள் சேனலில் ஜனநாயகன் படம் ஒளிபரப்பாகி இருக்கிறது.

சட்டவிரோதமாக லீக் ஆன படத்தை ஒளிபரப்பிய சேனல் மீது போலீசார் வழக்கு பதிவு செய்து உரிமையாளரை கைது செய்தனர். மேலும் சேனல் அலுவலகத்துக்கு சீல் வைக்கப்பட்டு உள்ளது.

# குபேரர் வழிபாடு..!!

அள்ள அள்ள குறையாத செல்வத்தை பெற... குபேரர் வழிபாடு..!!

செல்வத்தின் அதிபதியாக திகழும் குபேரனுக்கு பல்வேறு பெயர்கள் இருந்தாலும் அவரை நினைவூட்டுவது என்னவோ அவர் கையில் வைத்திருக்கும் பணம் தான். பணம், பொருள், நகைகள் போன்ற அத்தனை செல்வங்களையும் வாரி வழங்கக்கூடிய குபேர பகவானுக்கு உகந்த கிழமை வியாழக்கிழமை ஆகும்.

வெள்ளிக்கிழமையில் எப்படி மகாலட்சுமியை வேண்டி வழிபடுகிறோமோ, அதேபோல வியாழக்கிழமையில் குபேர வழிபாடு செய்வது சிறப்பு.

குபேரர் செல்வத்தின் கடவுள் என்பதால், அவரை வழிபடுவதன் மூலம் செல்வ வளம் பெருகும் என்பது நம்பிக்கை.

வியாழக்கிழமையில் குபேரனை எவ்வாறு வழிபடலாம்?

வியாழக்கிழமையன்று காலை குளித்து முடித்து விட்டு, வீட்டை சுத்தம் செய்து, வாசலில் பச்சரிசி மாவில் கோலம் போட வேண்டும்.

வாசல் நிலைப்படிக்கு சந்தனம் தெளித்து, மஞ்சள் குங்குமம் வைக்க வேண்டும்.

பின்னர் வீட்டில் எப்போதும் விளக்கேற்றும் பூஜையறையில் குபேரர் படத்தை வைத்து, தாமரை மலர், சங்கு ஆகியவற்றை இருபுறமும் வைத்து விளக்கு ஏற்றி வழிபட வேண்டும்.

நெல்லி மரத்தில் மகாலட்சுமி வாசம் செய்வதாக ஐதீகம் உண்டு. எனவே குபேர பூஜையின் பொழுது கட்டாயம் நெல்லிக்கனியை வைத்து வழிபட வேண்டும் என்பது சிறப்பிற்குரியது.

பிறகு அவலுடன் சிறிதளவு பால் மற்றும் சர்க்கரை சேர்த்து நைவேத்தியமாக படைக்க வேண்டும். ஏனென்றால் குபேரருக்கு மிகவும் பிடித்த உணவு அவல் ஆகும்.

இப்படி செய்வதால் நமக்கு குபேரரின் அருள் கிடைத்து குடும்பத்தில் அனைத்து செல்வங்களும் கிடைக்கும் என்பது ஐதீகம்.

## குபேர விளக்கு பூஜை வழிபாடு :

குபேரருக்கு உகந்த நாளான வியாழக்கிழமை அன்று இந்த விளக்கு பூஜையை நாம் செய்ய வேண்டும்.

குபேர விளக்கு (அல்லது அகல் விளக்கு) மற்றும் மனை அல்லது தட்டிற்கு மஞ்சள், குங்குமத்தை ஒற்றைப்படையில் வைத்து அலங்கரித்து கொள்ளுங்கள்.



குபேர விளக்கு வைக்கும் மனை அல்லது தட்டில் பச்சரிசியை பரப்பி, அதில் ஐந்து ரூபாய் நாணயத்தை வைத்து கொள்ளுங்கள்.

பின்பு குபேர விளக்கில் நெய் அல்லது நல்லெண்ணெய் சேர்த்து குபேரருக்கு உகந்த பச்சை நிற திரி கொண்டு விளக்கு ஏற்றுவது மிகச்சிறப்பு. பச்சை நிற திரி இல்லையெனில் பஞ்சு திரியையும் பயன்படுத்தலாம்.

குபேரருக்கு உகந்த வடக்கு திசை நோக்கி குபேர விளக்கை (அல்லது அகல் விளக்கு) ஏற்ற வேண்டும். குபேர விளக்கில் ஐந்து கற்கண்டு சேர்த்து விளக்கை சுற்றி வாசனை மலர்கள் வைக்க வேண்டும். கற்கண்டு சேர்ப்பது பணவரவை அதிகரிக்க செய்யும்.

குபேர விளக்கு ஏற்றிய பின் வீட்டின் நிலை வாசலில் குபேரருக்கு உகந்த வடக்கு திசையில் விளக்கை வைக்க வேண்டும். ஏன் இந்த விளக்கை நிலை வாசலில் ஏற்ற வேண்டும்?

செல்வத்தின் அதிபதியான குபேரனை வீட்டின் வாசலில் வைத்து பூஜித்தால், நமது செல்வத்திற்கு பாதுகாப்பும், செழிப்பும் உண்டாகும்.

குபேர மந்திரத்தை மனதில் உச்சரித்துக் கொண்டு விளக்கு ஏற்றினால் மிகவும் நல்லது.

ஒவ்வொரு வியாழக்கிழமையும் மாலை 5 மணியிலிருந்து 8 மணிக்குள் உங்கள் வீட்டு நிலை வாசற்படியில் இவ்வாறு வடக்கு திசை நோக்கி குபேர விளக்கு ஏற்றி வர உங்கள் வீட்டில் எப்போதும் செல்வம் குறையாமல் பெருகிக் கொண்டே இருக்கும்.

வீட்டில் குபேரர் சிலையை எந்த பக்கம் வைக்க வேண்டும்?

குபேரர் செல்வத்திற்கு அதிபதி. இவர் வடக்கு திசைக்கு உரிய காவல் தெய்வம் ஆவார். இவர் வடக்கு திசையில் இருந்து உலகை பாதுகாக்கிறார். இவர் பூமியில் உள்ள பொக்கிஷங்கள் அனைத்திற்கும் அதிபதி. இவர் பிரம்மாவின் பேரனான விச்வரஸ் என்பவருக்கு மகனாக பிறந்தவர். வடக்கு திசையானது குபேரனுக்காக இருப்பதால் வீடுகளில் பணம் அல்லது நகைகள் வைக்கும் பெட்டி அல்லது 'பீரோ' வடக்கு திசை பார்த்து திறப்பது போல இருக்கவேண்டும். தென்கிழக்கு பகுதியில் உள்ள அறை அல்லது மற்ற அறைகளில் உள்ள தென்கிழக்கு மூலையில் பணம் அல்லது நகைப்பெட்டியை வைக்க கூடாது. அக்னி பாகம் தவிர மற்ற அறைகளில் பணம் வைக்கும் 'பீரோவை' வைப்பதென்றால், அதன் தென்மேற்கு பகுதியில் வடக்கு அல்லது கிழக்கு நோக்கியபடி வைக்க வேண்டும். குபேரரின் திசையான வடக்கு திசையில் குபேர சிலையை வைத்து வழிபடுவது மேலும் செல்வம் சேர வழிவகுக்கும்.

## பலன்கள் :

குபேரர் செல்வத்தின் அதிபதியாக இருப்பதால், அவரை வழிபடுவதன் மூலம் செல்வம் பெருகும். கடன் சுமையால் அவதிப்படுபவர்கள் குபேரரை வழிபட்டால் கடன் பிரச்சனைகள் தீர்ந்து நிம்மதி பெறுவார்கள். தொழில்/வியாபாரத்தில் லாபம் அதிகரிக்க குபேர வழிபாடு உதவும். குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சி, செழிப்பு நிலவுவதற்கு குபேர வழிபாடு சிறந்தது. நோய் நொடிகள் இல்லாத ஆரோக்கியமான வாழ்க்கை பெற குபேர வழிபாடு உதவும்.

**-பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்

---

தினம் ஒரு தலைவர்கள்

# பீரா சுரேந்திர சாய் வரலாறு

பீரா சுரேந்திர சாய் (23 ஜனவரி 1809 - 28 பிப்ரவரி 1884) தற்போதைய ஒடிசாவைச் சேர்ந்த ஒரு இந்திய புரட்சியாளரும் சுதந்திரப் போராட்ட வீரரும் ஆவார். சம்பல்பூர் மாநிலத்தின் ஆட்சியாளர்களை அரியணையிலிருந்து இறக்கிய பின்னர், இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துப் போராடினார் .

பீரா சுரேந்திர சாய் மற்றும் அவரது கூட்டாளிகளான மாதோ சிங் , குஞ்சல் சிங், ஐரி சிங், பைரி சிங், உத்தந்த் சாய், உஜ்ஜல் சாய், ககேஸ்வர் தாவோ, கருணாகர் சிங் , சலேக்ராம் பாரிஹா, கோபிந்தா சிங், பஹார் சிங், ராஜீ காசியா, கமல் சிங், ஹாதி சிங், சாலிக் ராம் பாரிஹா, லோக்நாத் பாண்டா/காடியா, மிருதுஞ்சய பாணிக்ராஹி, ஜகபந்து ஹோட்டா, பத்மநாப குரு, திரிலோச்சன் பாணிக்ராஹி மற்றும் பலர் இந்தியாவில் பிரிட்டிஷ் காலனித்துவ விரிவாக்கத்தை எதிர்த்து ஒன்றாகவும் தனித்தனியாகவும் பணியாற்றினர், இதனால் பிரிட்டிஷ் அதிகாரிகள் மேற்கு ஒடிசா பிராந்தியத்தின் பெரும்பகுதியை கணிசமான காலத்திற்கு கட்டுப்பாட்டில் எடுத்துக்கொள்வதைத் தடுத்தனர். அவர்களில் பலர் காலனித்துவ அதிகாரிகளால் விசாரிக்கப்பட்டு தூக்கிலிடப்பட்டனர்; ஹட்டே சிங் அந்தமானில் உள்ள செல்லுலார் சிறையில் (காலா பானி என்றும் அழைக்கப்படுகிறது) இறந்தார் . சம்பல்பூர் சிங்கம் வீர் சுரேந்திர சாய் 1884 பிப்ரவரி 28 அன்று ஆசிர்கர் சிறையில் இறந்தார்.

ஆரம்பகால வாழ்க்கை மற்றும் பின்னணி சாய் 1809 ஜனவரி 23 ஆம் தேதி ஒடிசாவின் சம்பல்பூருக்கு வடக்கே சுமார் 40 கி.மீ தொலைவில் உள்ள கிண்டா என்ற சிறிய கிராமத்தில் பிறந்தார் . அவர் தர்ம சிங்கின் ஏழு குழந்தைகளில் ஒருவராகவும், சம்பல்பூர் மாநிலத்தின் ஆளும் குலத்தைச் சேர்ந்தவர் . அவர் சௌஹான் வம்சத்தின் நான்காவது மன்னரான மாதேகர சாயின் மகனான அனிருத சாயால் தொடங்கப்பட்ட கிளையைச் சேர்ந்தவர்.

அரியணைக்கு நடிப்பவர் சம்பல்பூரின் கடைசி மகாராஜாவான மகாராஜ் சாய், சௌஹான் வம்சத்தைச் சேர்ந்தவர். இந்த வம்சத்தில் பல உறுப்பினர்களும் பல கிளைகளும் இருந்தன. சம்பல்பூரில், மகாராஜா ஒரு ஆணாக மட்டுமே இருக்க முடியும், மேலும் மகாராஜ் சாய்க்கு மகன்கள் இல்லாததால், அவர் சுரேந்திர சாயை தனது சட்டப்பூர்வ வாரிசாகத் தேர்ந்தெடுத்தார். சுரேந்திர சாய் பல ஆண்டுகளுக்கு முன்பு சம்பல்பூரை ஆண்ட மகாராஜா மதுக்கரின் சகோதரர் இளவரசர் அனிருத்த சாயின் வழித்தோன்றல் ஆவார். இருப்பினும், சுரேந்திர சாய் முழுமையான சுதந்திர நிர்வாகத்தை விரும்பியதாலும், ஆங்கிலேயர்களுடன் எந்த வகையிலும் இணைந்திருக்க விரும்பாததாலும் இந்தக் கோரிக்கையை ஆங்கிலேயர்கள் நிராகரித்தனர்.



அரியணைக்கான கிளர்ச்சி 1827 ஆம் ஆண்டில் சம்பல்பூரின் ஆட்சியாளரான ராஜா மகாராஜா சாய், வாரிசு இல்லாமல் இறந்தார். பிரிட்டிஷ் அரசாங்கம் தனது விதவை ராணி மோகன் குமாரியை மாநிலத்தின் ஆட்சியாளராக நியமித்தது. இது ஆண் ஆட்சியாளர்கள் மட்டுமே மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்ற நிறுவப்பட்ட விதிமுறைகளுக்கு முரணானது. இதன் விளைவாக, கலவரங்கள் வெடித்தன, மேலும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சியாளருக்கும் சம்பல்பூரின் சிம்மாசனத்திற்கு உரிமை கோருபவர்களுக்கும் இடையே மோதல் அதிகரித்தது. ஆளும் குலத்தின் வழித்தோன்றல்களில் ஒருவரான சுரேந்திர சாய், மிக முக்கியமான உரிமையைக் கொண்டிருந்தார். காலப்போக்கில் ராணி மோகன் குமாரி பிரபலமடையவில்லை. அவரது நில வருவாய் கொள்கை, ஆங்கிலேயர்களிடம் அதிகாரம் இழக்க நேரிடும் என்று சந்தேகித்த கோண்ட் மற்றும் பிஞ்சால் பழங்குடி ஜமீன்தார்களையும் குடிமக்களையும் திருப்திப்படுத்தவில்லை. பிரிட்டிஷ் அதிகாரிகள் ராணி மோகன் குமாரியை அதிகாரத்திலிருந்து நீக்கி, அரச குடும்பத்தைச் சேர்ந்த ஆனால் குறைந்த சாதியைச் சேர்ந்த நாராயண் சிங்கை சம்பல்பூரின் மன்னராக நியமித்தனர். சுரேந்திர சாயின் வாரிசுரிமைக்கான கோரிக்கையை பிரிட்டிஷ் அரசாங்கம் புறக்கணித்தது. நாராயண் சிங்கின் ஆட்சியில் கிளர்ச்சி வெடித்தது. சுரேந்திர சாயும் அவரது நெருங்கிய கூட்டாளிகளான கோண்ட் ஜமீன்தார்கள் பல தொந்தரவுகளை உருவாக்கினர். பிரிட்டிஷ் துருப்புக்களுடன் நடந்த மோதலில் சுரேந்திர சாய், அவரது சகோதரர் உத்யந்த சாய் மற்றும் அவரது மாமா பலராம் சிங் ஆகியோர் கைது செய்யப்பட்டு ஹசாரிபாக் சிறைக்கு அனுப்பப்பட்டனர் , அங்கு பலராம் சிங் இறந்தார். மன்னர் நாராயண் சிங் 1849 இல் இறந்தார். நாராயண் சிங்கிற்குப் பிறகு ஆண் வாரிசு இல்லாததால் , டல்ஹவுசி பிரபு 1849 இல் சம்பல்பூரை இணைத்தார். 1857 ஆம் ஆண்டு எழுச்சியின் போது சிப்பாய்கள் சுரேந்திர சாயையும் அவரது சகோதரர் உத்யந்த சாயையும் விடுவித்தனர். சுரேந்திர சாயின் தலைமையில் சம்பல்பூரில் ஆங்கிலேயர்களுக்கு எதிரான எதிர்ப்பு தொடர்ந்தது. அவருக்கு அவரது சகோதரர்கள், மகன்கள், உறவினர்கள் மற்றும் சில ஜமீன்தார்கள் ஆதரவு அளித்தனர் .

எழுச்சி

சாய் 1827 ஆம் ஆண்டு தனது 18 வயதில் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போராடத் தொடங்கினார். 1840 ஆம் ஆண்டு முதல் முறையாக அவர் கைது செய்யப்பட்டு ஹசாரிபாக் சிறைக்கு அனுப்பப்பட்டார். 1857 கிளர்ச்சியின் போது போராளிகளால் அவர் ஹசாரிபாக் சிறையிலிருந்து தப்பினார். அவர் தனது நடவடிக்கைகளை ஒடிசாவின் மலைப்பாங்கான பகுதிகளுக்கு நகர்த்தி, 1862 இல் சரணடையும் வரை எதிர்ப்பைத் தொடர்ந்தார். சரணடைவதற்கு முன்பு அவர் ஹசாரிபாக்கில் 17 ஆண்டுகள் சிறையில் கழித்தார், இறுதிக் கைதுக்குப் பிறகு அவர் இறக்கும் வரை தொலைதூர ஆசிர்கர் மலைக்கோட்டையில் 19 ஆண்டுகள் காவலில் வைக்கப்பட்டது உட்பட 20 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்தார்.

அவரை அடக்குவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் 1857 ஆம் ஆண்டு இந்தியக் கலகம் 1858 ஆம் ஆண்டின் இறுதியில் சரிந்தது, இந்தியா முழுவதும் ஆங்கிலேயர்களால் சட்டம் ஒழுங்கு மீட்டெடுக்கப்பட்டது , ஆனால் அவர் தனது புரட்சியைத் தொடர்ந்தார். ஆங்கிலேயர்களின் இராணுவ வளங்கள் அவருக்கு எதிராகத் தூண்டப்பட்டன, மேலும் இந்தியாவின் பிற இடங்களில் கிளர்ச்சியை அடக்குவதில் பெருமை பெற்ற மேஜர் ஃபார்ஸ்டர், கேப்டன் எல். ஸ்மித் மற்றும் பிற ஜெனரல்கள் அவரது புரட்சியை முறியடிக்க சம்பல்பூருக்கு கொண்டு வரப்பட்டனர். ஆனால் அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்தன, சுரேந்திர சாய் நீண்ட காலமாக ஆங்கிலேயர்களின் உத்தியை முறியடிப்பதில் வெற்றி பெற்றார். முழு இராணுவ மற்றும் சிவில் அதிகாரமும், சுரேந்திர சாயையும் அவரது ஆதரவாளர்களையும் அடக்குவதற்கான ஒரு ஆணையரின் அதிகாரமும் கொண்ட புகழ்பெற்ற ஜெனரலான மேஜர் ஃபார்ஸ்டர், சம்பல்பூரில் மூன்று ஆண்டுகள் ஆட்சி செய்த பின்னர் 1861 இல் பிரிட்டிஷ் அதிகாரத்தால் நீக்கப்பட்டார். அவரது வாரிசான மேஜர் இம்பேயால் சாயை தோற்கடிக்க முடியவில்லை. ஆங்கிலேயர்கள் கிளர்ச்சியாளர்களின் முழு உணவுப் பொருட்களையும் கைப்பற்றினர், அவர்களுக்கு உணவு மற்றும் பிற வாழ்க்கைத் தேவைகளுக்கான அனைத்து வளங்களையும் நிறுத்தினர். மேஜர் இம்பே வன்முறைப் போர் என்ற கருத்தை கைவிட்டு, இந்திய அரசாங்கத்தின் ஒப்புதலுடன் அமைதி மற்றும் நல்லெண்ணக் கொள்கையை எச்சரிக்கையுடன் பின்பற்றினார். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நேர்மை மற்றும் நேர்மையின் மீது முழு நம்பிக்கை வைத்து சுரேந்திர சாய் சரணடைந்தார். இருப்பினும், இம்பேயின் மரணத்திற்குப் பிறகு, சூழ்நிலைகள் திடீரென மாறின, பிரிட்டிஷ் நிர்வாகிகள் அவர் மீதான தங்கள் விரோதத்தை மீண்டும் தொடங்கினர்.

கடைசி நாட்கள்

சம்பல்பூர் புதிதாக உருவாக்கப்பட்ட மத்திய மாகாணங்களின் அதிகார வரம்பிற்குள் 1862 ஏப்ரல் 30 அன்று கொண்டுவரப்பட்டது; வீர் சுரேந்திர சாய் விரைவில் சரணடைய முடிவு செய்தார். இருப்பினும், அவர் ஏமாற்றமடைந்ததாகவும், புதிய அமைப்பு பழைய தாராளமயக் கொள்கையை மாற்றியமைத்ததாகவும் கூறப்படுகிறது. வீர் சுரேந்திர சாயின் சரணடைதல் புரட்சியை முடிவுக்குக் கொண்டுவரவில்லை என்பதைக் கண்டறிந்த நிர்வாகிகள். அவர்கள் ஒரு சதித்திட்டத்தை ஒழுங்கமைக்க இறங்கி, வீர் சுரேந்திர சாயையும் அவரது அனைத்து உறவினர்கள், நண்பர்கள் மற்றும் ஆதரவாளர்களையும் திடீரென கைது செய்தனர். பின்னர் சாயும் அவரது ஆறு ஆதரவாளர்களும் ஆசிர்கர் மலைக்கோட்டையில் தடுத்து வைக்கப்பட்டனர். சாய் தனது வாழ்க்கையின் கடைசி பகுதியை சிறைபிடிக்கப்பட்டார். 1884 ஆம் ஆண்டு மே 23 ஆம் தேதி, சுரேந்திர சாய் தனது சொந்த நிலத்திலிருந்து விலகி ஆசிர்கர் கோட்டையில் இறந்தார். இந்தியாவில் பிரிட்டிஷ் பேரரசால் ஆக்கிரமிக்கப்பட்ட கடைசி நிலப்பகுதிகளில் சம்பல்பூர் ஒன்றாகும் , சுதேச அரசுகளை கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை . இது பெரும்பாலும் வீர சுரேந்திர சாயின் முயற்சிகளால் ஏற்பட்டது. அவர் ஒரு சிறந்த வாள்வீரர். அப்பகுதி மக்கள் அவரை அன்பாக பீரா (அல்லது "வீர்" என்றால் துணிச்சலானது) சுரேந்திர சாய் என்று அழைத்தனர்.

## வங்கதேச கொள்ளை கும்பல் மீது போலீஸ் துப்பாக்கிசூடு: 6 பேர் கைது

**புதுடெல்லி, ஏப்.17:**

வங்காளதேசத்தை சேர்ந்த கொள்ளையர்கள் இந்தியாவில் பல நகரங்களில் பூட்டியிருந்த வீடுகளை நோட்டமிட்டு திருடி வந்தது. அந்த கும்பலை பிடிக்க முடியாமல் போலீசார் திணறி வந்தனர். அந்த கும்பல் தெற்கு டெல்லிக்கு வருவதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதனை தொடர்ந்து டெல்லிக்குள் நுழைந்த வாகனங்களை போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில் சராய் கலே கான் என்ற இடத்தில் ஒரு வாகனத்தில் வந்த ஆறு பேர் கும்பல் போலீஸ் பிடியில் சிக்காமல் தப்பி ஓடியது. அவர்களை விரட்டி சென்ற போலீசார் துப்பாக்கியால் சுட்டு பிடித்தனர். இந்தியா-வங்காளதேசம் எல்லை வழியே சட்ட விரோதமாக நுழைந்து இந்திய நகரங்களில் கொள்ளையடித்து விட்டு தங்கள் நாட்டுக்கு சென்று விடுவதை வழக்கமாக கொண்டிருந்தனர். இவர்கள் அனைவரும் வங்காளதேசத்தின் பகர்ஹத் மாவட்டங்களை சேர்ந்தவர்கள்.

இந்த கும்பல் மீது, 14க்கும் மேற்பட்ட வழக்குகள் உள்ளன. அவற்றில் பல டெல்லி, கோவா, கர்நாடகா மாநிலங்களில் பதிவானவை. இந்த கும்பலை சுட்டு பிடித்த போலீசாரை உயரதிகாரிகள் பாராட்டினர். காயமடைந்தகொள்ளையர்களில் சிலர், மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து, ஆறு கைத்துப்பாக்கிகள், தோட்டாக்கள், கத்தி உள்ளிட்ட ஆயுதங்களை பறிமுதல் செய்து குறித்து போலீசார் மற்றும் அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

## இந்திய கடற்படைக்கு 18 அதிநவீன வாட்டர்ஜெட்: நார்வே நிறுவனத்துடன் ஒப்பந்தம் கையெழுத்து

**புதுடெல்லி, ஏப்.17:**

இந்திய கடற்படையின் அடுத்த தலைமுறை ஏவுகணை கப்பல் திட்டத்திற்காக, 18 அதிநவீன 'கமேவா' வாட்டர்ஜெட் உந்துவிசை அமைப்புகளை வழங்குவதற்கான ஒப்பந்தத்தை நார்வேயைச் சேர்ந்த கோங்ஸ் பெர்க் மேரிடைம் நிறுவனம் பெற்றுள்ளது.

இதுகுறித்து வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: இந்திய கடற்படைக்கு தேவையான வாட்டர்ஜெட் கருவிகளை வழங்க நார்வே நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

வழக்கமான கப்பல்களில் காணப்படும் விசிறி போன்ற புரொப்பல்லர் அமைப்பிற்கு மாற்றாக, இந்த வாட்டர்ஜெட் தொழில்நுட்பம் நீரை உள்ளிழுத்து, அதிக வேகத்தில் வெளியேற்றுவதன் மூலம் கப்பலை இயக்கும்.

இதன் மூலம் கப்பல்கள் எதிரிகளின் ரேடார் பார்வையில் படாமல் அதிவேகமாகச் செல்லவும், கடலில் மிக லாவகமாகத் திரும்பவும் முடியும். இந்தக் கப்பல்களைக் கட்டி வரும் கொச்சி கப்பல் கட்டும் தளத்துடன் இணைந்து நார்வே நிறுவனத்துடன் இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கொச்சி கப்பல் கட்டும் தளத்தின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில், "ஏற்கனவே பல வர்த்தக ரீதியான திட்டங்களில் இந்நிறுவனம் எங்களுக்கு நம்பகமான கூட்டாளியாக இருந்துள்ளது.

இந்த முக்கியத் திட்டத்திற்குத் தேவையான தரமான மற்றும் நுணுக்கமான தொழில்நுட்பக் கருவிகளை அவர்கள் வழங்குவார்கள் என எதிர்பார்க்கிறோம்" என்றார்.

## மேகதாது திட்டத்திற்கு விரைவாக அனுமதி: பிரதமர் மோடியிடம் சித்தராமையா நேரில் கோரிக்கை

**பெங்களூரு, ஏப்.17:**



கர்நாடகத்தில் நடந்த கோவில் திறப்பு விழா ஒன்றில் பங்கேற்பதற்காக நேற்று பிரதமர் மோடி சிறப்பு விமானத்தில் பெங்களூரு வந்தார். விமான நிலையத்தில் அவரை வரவேற்ற முதல்-மந்திரி சித்தராமையா கர்நாடக திட்டங்கள் தொடர்பான கோரிக்கை மனுவை பிரதமரிடம் வழங்கினார்.

குறிப்பாக அந்த கடிதத்தில், உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த பெங்களூருவுக்கு சிறப்பு நிதி ஒதுக்கீடாக ரூ.6 ஆயிரம் கோடி வழங்க வேண்டும். கர்நாடகத்தில் மேகதாது திட்டத்தை அமல்படுத்துகிறோம். இதற்கு விரைவாக அனுமதி வழங்க வேண்டும். இதுகுறித்து மத்திய நீர் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும்.

அங்கு 67 டி.எம்.சி. (ஒரு டி.எம்.சி. என்பது 100 கோடி கனஅடி) தேக்கும் வகையில் அணை கட்டப்படுகிறது. இது பெங்களூருவின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய உதவும். மேலும் தமிழ்நாட்டுக்கும் குறித்த காலத்தில் தண்ணீர் திறக்க முடியும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

மேகதாது அணை கட்டும் திட்டத்தை கர்நாடக அரசு பெங்களூரு தெற்கு (ராமநகர்) மாவட்டம் கனகபுரா அருகே காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது என்ற இடத்தில் கட்டப்பட உள்ளது. இதன் திட்ட மதிப்பு ரூ.15 ஆயிரம் கோடி என கணக்கிடப்பட்டுள்ளது. இந்த அணை கட்டும் திட்டத்திற்கான நிலம் கையகப்படுத்துவதற்கான முன்னேற்பாட்டு பணியை கர்நாடக அரசு தீவி ரப்படுத்தி உள்ளது குறிப்பிடத்தக்கது.

## மூன்று திருத்த மசோதாக்களுக்கு எதிர்ப்பு! மக்களவையில் கனிமொழி நோட்டீஸ்!

**புதுடெல்லி, ஏப்.17:**




மக்களவையில் மத்திய அரசு தாக்கல் செய்யவுள்ள மூன்று திருத்த மசோதாக்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி நோட்டீஸ் அளித்துள்ளார்.

நாடாளுமன்ற நடப்பு பட்ஜெட் கூட்டத் தொடரின் நீட்சியாக, வியாழக்கிழமை (ஏப்.16) முதல் மூன்று நாள்களுக்கு சிறப்பு அமாவு நடைபெறவுள்ளது.

மக்களவை-பேரவைகளில் 33 சதவீத மகளிா் இடஒதுக்கீட்டை 2029-ஆம் ஆண்டுமுதல் அமலாக்கவும், அதற்கு ஏதுவாக மொத்த மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை 543-இல் இருந்து 850 வரை அதிகரிக்கவும் வகை செய்யும் அரசமைப்புச் சட்டத்தின் 131-ஆவது திருத்த மசோதா உள்பட மூன்று மசோதாக்களை அறிமுகம் செய்து, விவாதித்து நிறைவேற்றும் நோக்கில் இந்த அமா்வு நடைபெறுகிறது.

இதில், மக்கள்தொகை அடிப்படையில் தொகுதிகள் மறுவரையறை செய்வதற்கு தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களைச் சேர்ந்த அரசியல் கட்சிகள் கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் இன்று கருப்புக் கொடியேற்றி, மசோதா நகலை எரித்து போராட்டம் நடத்தினார். மேலும், தமிழ்நாடு முழுவதும் இன்று கருப்புக் கொடியேற்றும் போராட்டம் நடைபெற்று வருகின்றது.

இந்த நிலையில், அரசியலமைப்பு (131-வது திருத்த) மசோதா - 2026, ஒன்றியப் பிரதேசச் சட்டங்கள் (திருத்த) மசோதா - 2026 மற்றும் தொகுதி மறுவரையறை மசோதா - 2026 ஆகியவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து மக்களவையில் கனிமொழி நோட்டீஸ் வழங்கியுள்ளார்.

முன்னதாக, முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையில் திமுக எம்பிக்கள் ஆலோசனைக் கூட்டம் காணொலி வாயிலாக புதன்கிழமை நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

## மேற்கு வங்கத்தில் 15 ஆண்டுகளாக ஊழல் ஆட்சி: பிரதமர் மோடி குற்றச்சாட்டு

**புதுடெல்லி, ஏப்.17:**

வங்காள புத்தாண்டு 'பொய்லா பைசாக்'-ஐ முன்னிட்டு மேற்கு வங்க மக்களுக்கு பிரதமர் எழுதிய வாழ்த்து கடிதத்தில் கூறியிருப்பதாவது: வங்காள புத்தாண்டை முன்னிட்டு மேற்கு வங்க மக்களுக்கு வாழ்த்துகள்.

கடந்த 15 ஆண்டுகளாக மேற்கு வங்கத்தில் குழப்பமான ஊழல் ஆட்சி நடைபெறுகிறது. மக்கள் தங்களின் அடிப்படை உரிமை, கவுரவம் மற்றும் வளமான கலாச்சார பாரம்பரியத்தை இழந்துள்ளனர். மேற்கு வங்கத்தில் தற்போது நிலவும் சூழல் பெண்களின் பாதுகாப்பு, இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு,ஏழைகளின் உரிமைகள் ஆகியவற்றை சீர்குலைத்துள்ளது.

ஒரு காலத்தில் மேற்கு வங்கம் நாட்டுக்கு வழி காட்டியது. எனவே வளர்ச்சியடைந்த மேற்கு வங்கத்தை உருவாக்க நாம் உறுதி எடுக்க வேண்டும். இங்கு ஏழைகள் பட்டினியாக இருக்கக் கூடாது. இளைஞர்கள் வேலை தேடி வேறு மாநிலங்களுக்கு செல்லக் கூடாது.

மேற்குவங்கத்தின் எதிர்காலம் வரும் சட்டப்பேரவை தேர்தலில் உள்ளது. பாஜக அரசு மேற்கு வங்கத்தை வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்லும். அதனால் மக்கள் இந்த தேர்தலில் சரியான முடிவு எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

## ஆந்திர வெடி விபத்தில் 5 பேர் உயிரிழப்பு

**அனந்தபூர், ஏப்.17:**

ஆந்திர மாநிலம் கும்மராவான்லபல்லியில் குவாரி தொழிலாளர்கள் குடும்பத்துடன் வசித்து வந்தனர். இவர்கள் குவாரிக்கு தேவையான டெட்டனேட்டர், அமோனியம் சல்பேட், டீசல் போன்றவற்றை வைத்திருந்தனர்.

இந்நிலையில், நேற்று வெடி விபத்து ஏற்பட்டதில் 4 பேர் அதே இடத்திலும் ஒருவர் மருத்துவமனையிலும் உயிரிழந்தனர். காயம் அடைந்த 20 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 12 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். இது குறித்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## தெலுங்கு தேச செயல் தலைவராக நாரா லோகேஷ் நியமனம்



**அமராவதி, ஏப்.17:**

ஆந்திர முதல்வரும் தெலுங்கு தேசம் கட்சியின் (டிடிபி) தலைவருமான சந்திரபாபு நாயுடு தனது மகனும் மாநில அமைச்சருமான நாரா.லேகேஷை கட்சியின் செயல் தலைவராக நியமித்துள்ளார்.


29 உறுப்பினர்களை கொண்ட அரசியல் விவகாரக் குழு, 31 உறுப்பினர்களை கொண்ட தேசியக் குழு, 185 உறுப்பினர்களைக் கொண்ட கட்சியின் மாநிலக் குழுவையும் அவர் அறிவித்தார். கட்சியின் தேசிய தலைவராக சந்திரபாபு நாயுடுவும் மாநில தலைவராக பி.ஸ்ரீநிவாஸ் ராவும் தொடர்கின்றனர். தேசிய பொதுச் செயலாளர்களாக மத்திய அமைச்சர் ராம்மோகன் நாயுடு, நந்தியால் எம்.பி. பைரெட்டி ஷபரி, மூத்த தலைவர் ராஜேஷ் ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

44 ஆண்டு கால வரலாற்றில்: கட்சியின் 44 ஆண்டு கால வரலாற்றில் செயல் தலைவர் நியமனம் செய்யப்பட்டிருப்பது இதுவே முதல்முறையாகும். முதல்வரின் மைத்துனரும் மூத்த தெலுங்கு நடிகருமான நந்தமுரி பாலகிருஷ்ணா, அரசியல் விவகாரக் குழு உறுப்பினராக தொடர்கிறார்.

மாநிலக் குழுவில் உள்ள 185 பேரில் 50 பேர் பெண்களாவர். மேலும் பிசி- 77, எஸ்சி- 25, எஸ்டி- 7, சிறுபான்மையினர் 13 பேர் இடம் பெற்றுளனர். இந்த நியமனம் மூலம் அனுபவம் வாய்ந்தவர்கள் மற்றும் இளைஞர்களை கொண்டு கட்சிக்கு புதிய உயிரோட்டம் கொடுக்கப்பட்டு உள்ளது.

## மகளிர் இடஒதுக்கீட்டை ஆதரிக்கிறோம் – ராகுல் காந்தி

**புதுடெல்லி, ஏப்.17:**



நாடாளுமன்றத்தில் தொகுதி மறுவரையறை மசோதாவுக்கு எதிராக காங்கிரஸ் உறுப்பினர்கள் வாக்களிப்பார்கள் என்றும், மகளிர் இடஒதுக்கீட்டு மசோதாவை ஆதரிப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக வீடியோ வெளியிட்டு எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி எம்.பி. பேசியுள்ளதாவது:

மகளிர் இடஒதுக்கீட்டை நிபந்தனையின்றி காங்கிரஸ் கட்சி ஆதரிக்கிறது. மகளிர் இடஒதுக்கீடு நமது அரசமைப்பின் ஒரு பகுதி; அரசு முன்மொழிந்த இடஒதுக்கீட்டுக்கும் அதற்கும் சம்பந்தமில்லை மகளிர் மசோதா திருத்தம், தொகுதி மறுவரையறையை பயன்படுத்தி அதிகாரத்தை கைப்பற்ற முயற்சி செய்கிறது. சாதிவாரி கணக்கெடுப்பை புறக்கணித்து, ஓபிசி, எஸ்சி எஸ்டி உரிமையை திருடுவதை அனுமதிக்க மாட்டோம்.

மக்களவை மற்றும் மாநில சட்டப்பேரவைகளில் மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு அளிக்கும் 106-ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தம் 2023-ஐ (நாரி சக்தி வந்தன் அதிநியம்) அமல்படுத்துவதற்கான சட்டத் திருத்த மசோதா ஏப்.16 முதல் ஏப்.18 வரை நடைபெறவுள்ள நாடாளுமன்றக் கூட்ட த்தொடரில் அறிமுகமாகவுள்ளது.

அப்போது மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கை 850-ஆக அதிகரிக்கப்பட்டு அதில் 280 தொகுதிகள் மகளிருக்கு ஒதுக்கப்படவுள்ளன.

2029 மக்களவைத் தேர்தலின்போது இது நடைமுறைக்கு வரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலோசனையின் முடிவில் தொகுதி மறுவரையறை மசோதாவுக்கு எதிராக வாக்களிப்பதாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

## நாட்டிலேயே பயணிகள் சேவை, வருவாயில் தெற்கு ரயில்வே முதலிடம் பிடித்து சாதனை




**புதுடெல்லி, ஏப்.17:**

கடந்த நிதியாண்டில், இந்திய ரயில்வேயில் பயணிகள் சேவை மற்றும் வருவாயில் தெற்கு ரயில்வே முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளது.

கடந்த 2025-26-ம் நிதி ஆண்டில் இந்திய ரயில்வேயில் ஒட்டுமொத்த மண்டலங்களிலும் பயணிகள் வருவாயில் தெற்கு ரயில்வே ரூ.8,271.47 கோடி வருவாய் ஈட்டி முதலிடம் பிடித்துள்ளது. இது முந்தைய ஆண்டை விட ரூ.735.78 கோடி (9.8%) அதிகமாகும். மேற்கு ரயில்வே, மத்திய ரயில்வே 2, 3-வது இடங்களை பிடித்துள்ளன.

தெற்கு ரயில்வேயில் 229 சிறப்பு ரயில்கள் மூலம் 2,513 பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன. 32.97 லட்சம் பேர் பயணித்துள்ளனர். ஒரு பயணத்துக்கு சராசரியாக 1,312 பயணிகள் வீதம் பயணித்து, தெற்கு ரயில்வே தேசிய அளவில் (சராசரி 894) முதலிடம் வகிக்கிறது.

கடந்த நிதி ஆண்டில் இந்திய ரயில்வேயின் அனைத்து மண்டலங்களையும்விட, முன்பதிவு ரயில்களில் அதிக இடங்கள் நிரப்புதல் விகிதத்தைப் பெற்று, தெற்கு ரயில்வே முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளது. தெற்கு ரயில்வேயில் இயக்கப்பட்ட ஒட்டுமொத்த முன்பதிவு ரயில்களில் 96 சதவீதம் ரயில்கள், 75 சதவீதத்துக்கும் அதிகமான இடங்கள் நிரப்பப்பட்டு இயங்கியுள்ளன.

கடந்த நிதி ஆண்டில் இயக்கப்பட்ட மொத்தம் 2.6 லட்சம் ரயில் பயணங்களில் (TRIPS), சுமார் 2.49 லட்சம் பயணங்கள் 75 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான மிகச்சிறந்த பயணிகள் இடங்கள் நிரப்புதல் விகிதத்தைக் கொண்டிருந்தன. இந்திய ரயில்வேயின் ஒட்டுமொத்த சராசரி இடங்களை நிரப்புதல் விகிதம் 87 சதவீதமாக உள்ள நிலையில், தெற்கு ரயில்வே அதைவிட அதிகமாக 96 சதவீதம் பெற்றுள்ளது. சிறப்பான திட்டமிடல் மற்றும் பயணிகள் தேவைக்கேற்ப ரயில்களை இயக்கியதன் மூலம் இந்த மைல்கல்லை எட்டியுள்ளோம் என்று தெற்கு ரயில்வே செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 180 சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்த புகாரில் கைதான மகாராஷ்டிர இளைஞரின் வீடு இடிப்பு

**மும்பை, ஏப்.17:**

மகாராஷ்டிராவின் அமராவதி மாவட்டம், பரத்வாடா நகரை சேர்ந்தவர் முகமது அயாஸ் என்கிற தன்வீர் (19). இவர் மீது, பாலியல் வன்கொடுமை, பாலியல் துன்புறுத்தல் மற்றும் ஆபாச வீடியோக்களை பதிவு செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக போலீஸார் கூறுகையில், "வாட்ஸ்-அப், ஸ்னாப்சாட் உள்ளிட்ட சமூக வலைதளங்கள் மூலம் 180 சிறுமிகளை முகமது அயாஸ்காதல்வலையில்வீழ்த்தியுள்ளார். பிறகு அவர்களை மும்பை மற்றும் புனேவுக்கு அழைத்துச் சென்று, ஆபாச வீடியோக்களை எடுத்துள்ளார். இது தொடர்பாக இவரிடம் 350 வீடியோக்கள் இருந்தன. அந்த சிறுமிகளை பிளாக்மெயில் செய்யவும், அவர்களை பாலியல் தொழிலுக்கு கட்டாயப்படுத்தவும் அந்த வீடியோக்களை இவர் பயன்படுத்தியுள்ளார்" என்றனர்.

முகமது அயாஸ் தொடர்புடைய சில புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் சமூக வலைதளங்களில் வைரலானதை தொடர்ந்து அவர் கடந்த செவ்வாய்க் கிழமை கைது செய்யப்பட்டார். அவரை 7 நாட்கள் போலீஸ் காவலில் விசாரிக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்த வழக்கில் மேலும் 3 சந்தேக நபர்களை போலீஸார் கைது செய்துள்ளனர். இந்நிலையில் முகமது அயாஸ் வீட்டில் இருந்த சட்டவிரோத கட்டுமானங்கள் நேற்று ஜேசிபி மூலம் இடித்து அகற்றப்பட்டன. இது தொடர்பாக நகராட்சி ஏற்கெனவே நோட்டீஸ் அனுப்பியிருந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## நாசிக் ஐடி அலுவலகத்தில் மதமாற்ற முயற்சி: மனிதவள பிரிவு மேலாளர் உட்பட 7 பேர் கைது

**நாசிக், ஏப்.17:**

டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் நிறுவனத்தின் (டிசிஎஸ்) நாசிக் கிளை அலுவலகத்தில் பயிற்சிக்கு சேரும் ஊழியர்களிடம் பாலியல் துன்புறுத்தல் மற்றும் மதமாற்ற முயற்சியில் ஒரு குழுவினர் ஈடுபடுவதாக புகார் அளிக்கப்பட்டது. இதையடுத்து அங்கு பெண் போலீஸார் துப்புரவு பணியாளர்கள் போல் வேலைக்கு அனுப்பப்பட்டு கண்காணிக்கப்பட்டனர். இதில் குற்றச்சாட்டுக்கள் உறுதி செய்யப்பட்டன. இந்த குற்றச் செயலில் மனித வள பிரிவு மேலாளர் மற்றும் மூத்த ஊழியர்கள் ஈடுபட்டது தெரியவந்தது. பயிற்சிக்கு வருபவர்களிடம் பணத் தேவை உள்ளவர்கள், குடும்ப பிரச்சினை உள்ளவர்கள் ஆகியோரை குறி வைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பாலியல் துன்புறுத்தலுடன் மதமாற்ற முயற்சியிலும் ஒரு கும்பல் ஈடுபட்டுள்ளது. இது தொடர்பாக மனிதவள மேலாளர் நிதா கான், ஆசிப் அன்சாரி, ஃஸபி ஷேக் உட்பட 7 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்த கும்பல் பயிற்சிக்கு சேர்ந்தவர்களிடம் இந்து கடவுள்கள் பற்றி தரக்குறைவான கருத்துக்களை தெரிவிப்பர். இதனால் மனம் புண்படும் பயிற்சியாளர்களை மனிதவள மேலாளர் நிதா கான் சமாதானம் செய்து அவர்களின் நம்பிக்கையை பெறுவார். இப்படி படிப்படியாக பயிற்சிக்கு சேர்பவர்களின் வாழ்க்கை முறை, உடை அணியும் பழக்கம் ஆகியவற்றை அந்தக் குழுவினர் மாற்றியுள்ளனர். மூளைச் சலவை செய்யப்பட்டவர்கள் தங்கள் வீடுகளில் உள்ள இந்து கடவுள்களின் படத்தை குடும்பத்தினருடன் தகராறு செய்து அகற்றியுள்ளனர்.




## ஆயுதப்படை பெண் காவலருக்கு கொலை மிரட்டல்: விசிக பிரமுகர் மீது வழக்குப்பதிவு

**சென்னை, ஏப்.17:** ஆயுதப்படை பெண் காவலருக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக விசிக பிரமுகர் மீது போலீஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

சென்னை திரு.வி.க நகர் தொகுதியில் அதிமுக கூட்டணி சார்பில் பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில பொதுச் செயலாளர் பொற்கொடி ஆம்ஸ்ட்ராங் போட்டியிடுகிறார்.

அவர் நேற்று முன்தினம் அயனாவரம் பிரிக்லைன் சாலையில் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தார். அப்போது, அங்கு கூட்ட நெரிசலுக்குள் வந்த நபர், பொற்கொடியுடன் புகைப்படம் எடுக்க முயன்றார்.

இதை பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த ஆயுதப்படை பெண் காவலர் பழனிபாரதி, மற்ற போலீஸார் உதவியோடு அந்த நபரை அப்புறப்படுத்த முயன்றார். உடனே அந்த நபர் பெண் காவலர் பழனிபாரதியை ஆபாசமாகத் திட்டி கொலை மிரட்டல் விடுத்ததாகக் கூறப்படுகிறது.

இந்த விவகாரம் தொடர்பாக சம்பந்தப்பட்ட பெண் காவலர், தலைமைச் செயலக குடியிருப்பு காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்படி, போலீஸார் வழக்குப்பதிந்து விசாரித்தனர்.

இதில், ஆயுதப்படை பெண் காவலருக்கு மிரட்டல் விடுத்தவர் புரசைவாக்கத்தைச் சேர்ந்த ஜேடிஆர் நாகராஜ் என்பதும், அவர் விடுதலை சிறுத்தைகள் கட்சியில் வடசென்னை மாவட்ட நிர்வாகியாக இருப்பதும் தெரியவந்தது. அவரிடம் தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது.

## சிறுமிக்கு பாலியல் கொடுமை முதியவருக்கு 61 ஆண்டு சிறை

**சிவகங்கை, ஏப்.17:** சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த முதியவருக்கு 61 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து சிவகங்கை நீதி மன்றம் தீர்ப்பளித்தது.

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே பட்டத்தரசிகிராமத்தைச் சேர்ந்த தொழிலாளி ராஜூ (68). இவர் 2021-ம் ஆண்டு 14 வயது சிறுமியை மிரட்டி பாலியல் வன்கொடுமை செய்தார். இதில் அந்தச் சிறுமி கர்ப்பமாக இருப்பது தெரியவந்தது.

குழந்தைகள் நலக் குழு நடத்திய விசாரணையில், ராஜூ பாலியல் வன்கொடுமை செய்தது தெரியவந்தது. இதுகுறித்து மானாமதுரை அனைத்து மகளிர் போலீஸார் வழக்குப் பதிந்து ராஜூவை கைது செய்தனர்.

இந்த வழக்கு விசாரணை சிவகங்கை போக்சோ நீதிமன்றத்தில் நடந்தது. இதில் ராஜூவுக்கு 3 குற்றப் பிரிவுகளின் கீழ் மொத்தம் 61 ஆண்டுகள் சிறை தண்டனையும், ரூ.4 ஆயிரம் அபராதமும் விதித்து நீதிபதி கோகுல்முருகன் தீர்ப்பளித்தார். மேலும், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ரூ.5 லட்சம் இழப்பீடு வழங்கவும் தமிழக அரசுக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

## மீஞ்சூர் அருகே வீட்டில் படித்துக் கொண்டிருந்த கல்லூரி மாணவியை வெட்டிய கஞ்சா போதை இளைஞர்கள்



**பொன்னேரி, ஏப்.17:** மீஞ்சூர் அருகே இரவில் வீட்டில் தேர்வுக்காக படித்துக் கொண்டிருந்த கல்லூரி மாணவியை அரிவாளால் வெட்டிய 3 பேர் கும்பலில் ஒருவர் பிடிபட்டுள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் அருகே வல்லூர் பகுதியை சேர்ந்த 17 வயது மாணவி ஒருவர், சென்னையில் உள்ள கல்லூரி ஒன்றில் பி.காம் 2-ம் ஆண்டு படிக்கிறார்.

நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் வீட்டின் முதல் மாடியில் உள்ள அறையில் தேர்வுக்காகப் படித்துக் கொண்டிருந்தார். அப்போது, இளைஞர்கள் 3 பேர், வீட்டின் பின்புறம் உள்ள முட்புதர் வழியாக பக்கத்து வீட்டு மாடியில் ஏறியுள்ளனர்.

பின்னர், அங்கிருந்து மாணவியின் வீட்டு முதல்மாடிக்குத் தாவி அங்குள்ள பொருட்களை திருட முயன்றதாகக் கூறப்படுகிறது. அவர்களைக் கண்டதும் அந்த மாணவி அதிர்ச்சியில் கூச்சலிட்டுள்ளார்.

மாணவியைக் கண்ட இளைஞர்கள், தங்களை மாட்டிவிட்டுவிடுவாரோ என்ற பயத்தில், அவரை அரிவாள், கத்தியால் சரமாரியாக வெட்டிவிட்டுதப்பினர். இதில் மாணவிக்கு வலது உள்ளங்கை, முழங்கை, நெற்றி, கால் மற்றும் பின்பக்க தலையில் பலத்த காயம் ஏற்பட்டது.

மாணவியின் அலறல் சத்தம் கேட்டு அங்கு வந்த அவரது பெற்றோர், சகோதரர் மற்றும் அக்கம்பக்கத்தினர் தப்பி ஓடிய இளைஞர்களை பிடிக்க விரட்டினர். இதில், இருவர் தப்பிய நிலையில் ஒருவர் பிடிபட்டார். அவருக்கு தர்ம அடிகொடுத்து மீஞ்சூர் காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

போலீஸார் நடத்திய விசாரணையில், பிடிபட்டது திருவள்ளூர் மாவட்டம், வல்லூர் அடுத்த அத்திப்பட்டு பகுதியைச் சேர்ந்த டில்லிபாபு என்ற ரோலக்ஸ் (24) என்பது தெரிந்தது. மேலும், அவர் கஞ்சா போதையில் இருந்ததாகக் கூறப்படுகிறது.

பொதுமக்கள் தாக்கியதில் அவரது பின் தலையில் காயம் ஏற்பட்டதால் உடனடியாக அவர் பொன்னேரி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். தாக்குதலுக்குள்ளான கல்லூரி மாணவியும், மீஞ்சூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை பெற்று வருகிறார்.

தப்பி ஓடிய இளைஞர்களை உடனடியாக கைது செய்ய ஆவடி காவல் ஆணையர் பிரேம்ஆனந்த் சின்ஹா உத்தரவிட்டுள்ளார். அதன்படி, தனிப்படை அமைக்கப்பட்டு தலைமறைவாக இருவரையும் போலீஸார் தொடர்ந்து தேடி வருகின்றனர்.

தலைவர்கள் கண்டனம்

இந்த சம்பவம் தொடர்பாக அரசியல் கட்சித் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். அவர்கள் வெளியிட்ட அறிக்கை:

அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி: கல்லூரி மாணவியை குறிவைத்து கஞ்சா போதையில் இருந்த இளைஞர்கள் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டு, கொலைவெறி தாக்குதல் நடத்திய சம்பவம் மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அளிக்கிறது. தமிழகத்தில் பெண்கள் பாதுகாப்பு கேள்விக்குறி ஆகியுள்ளதைப் பற்றி முதல்வர் ஒரு வார்த்தை பேசினாரா?

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன்: 5 ஆண்டுகால திமுக ஆட்சியில், தலைவிரித்தாடும் போதைப் பழக்கத்தால் பெண் களின் பாதுகாப்பு முற்றிலுமாக சீர்குலைந்துள்ளது.

பாமக தலைவர் அன்புமணி: திமுக ஆட்சியில் வீட்டில் இருக்கும் பெண்களுக்கும் கூட பாதுகாப்பு இல்லை என்ற நிலை உருவாகியுள்ளது.

அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன்: பள்ளி, கல்லூரி மாணவர்களை குறிவைத்து விற்பனை செய்யப்படும் போதைப் பொருட்களால் அவர்களின் எதிர்காலம் வீணாவதோடு, சட்டம் ஒழுங்கு சீர்கேடும் ஏற்படுகிறது. இவ்வாறு அவர்கள் கூறியுள்ளனர்.

## கோடை விடுமுறையை மாணவர்கள் பயனுள்ளதாக மாற்ற வேண்டும்: பள்ளிக்கல்வித் துறை அறிவுறுத்தல்




**சென்னை, ஏப்.17:** கோடை விடுமுறைக் காலத்தை மாணவர்கள் பயனுள்ளதாக மாற்ற வேண்டுமென பள்ளிக்கல்வித் துறை அறிவுறுத்தியுள்ளது. தமிழக பள்ளிக்கல்வி பாடத்திட்டத்தில் பயிலும் மாணவர்களுக்கு கோடை விடுமுறை நாளை (ஏப். 17) முதல் வழங்கப்பட்டுள்ளது.

மீண்டும் பள்ளிகள் ஜூன் 1-ம் தேதி திறக்கப்பட உள்ளன. எனவே இந்த விடுமுறை நாட்களில் மாணவர்களின் பாதுகாப்பு கருதி பெற்றோர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சங்கள் குறித்து பள்ளிக்கல்வித் துறை இயக்குநர் ச.கண்ணப்பன் சில அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

அதன் விவரம் வருமாறு: மாணவர்கள் விடுமுறை நாட்களில் கடல், ஆறு, ஏரி, குளம் மற்றும் குட்டை போன்ற நீர்நிலைகளில் குளிப்பதற்கு பெற்றோர் அனுமதிக்க வேண்டாம்.

கோடை வெப்பம் அதிகமாக இருப்பதால் வெளிப்புற விளையாட்டுகளின் போது அதிகளவு தண்ணீரை அருந்தச் செய்யுங்கள். வெயில் அதிகமாக இருக்கும் பகல் நேரத்தில் வெளியே செல்வதையும், விளையாடுவதையும் தவிர்க்கவும்.

விடுமுறை நாட்களில் சில மாணவர்கள் தங்கள் உடல் மற்றும் மனநலனைப் பாதிக்கும் சவால்களை எதிர்கொள்ள நேரிடும். அதை சரியாகக் கையாள வேண்டும்.


அதன்படி தனிமை உணர்வுகளைத் தடுக்க நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் சேர்ந்து விளையாடுதல், உணவு அருந்துதல், இசை நிகழ்ச்சிகளைக் கவனித்தல் ஆகியவற்றின் மூலம் சமூக தொடர்புகளை ஊக்குவிக்கவும், மனநலனைப் பேணவும் முடியும். டி.வி, செல்போன் ஆகியவற்றைப் பார்ப்பதில் அதிகமான நேரத்தை செலவிடுவதைத் தவிர்க்க அறிவுறுத்த வேண்டும்.

மாணவர்களின் வளர்ச்சிக்கு சமச்சீரான உணவு அளிப்பது அவசியம். எனவே பாரம்பரிய உணவு வகைகளைத் தரவேண்டும். கோடை காலத்துக்கு ஏற்ற பழ வகைகளை வழங்க வேண்டும்.

இதுதவிர மாணவர்களை அருகில் உள்ள பொது நூலகங்களுக்கு அழைத்துச் சென்று ஒரு மணி நேரமாவது புத்தகங்களைப் படிக்க ஊக்குவிக்கவும். அவர்களின் ஆர்வங்களைப் பொருத்து காமிக்ஸ் புத்தகங்கள், பொது அறிவு நூல்கள், சிறார் கதைகள் மற்றும் நீதி நூல்களைப் படிக்க அறிவுறுத்த வேண்டும்.

இசை, நடனம், ஓவியம் போன்றவற்றில் ஆர்வமுள்ள மாணவர்களை விடுமுறை நாட்களில் கற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும். தினமும் இருவேளை பல் துலக்கி, குளித்தல் போன்ற பழக்கங்களை ஊக்குவிக்க வேண்டும். பெரியோர்களை மதிக்கவும் அவர்களுக்கு உதவி செய்யவும் பழக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## கோவை, பல்லடத்தில் ஆவணமில்லாத ரூ.13 கோடி மதிப்பு நகைகள் பறிமுதல்



**கோவை/திருப்பூர், ஏப்.17:** கோவை மற்றும் பல்லடத்தில் உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட ரூ.12.93 கோடி மதிப்பிலான தங்க, வைர நகைகள், வெள்ளிப் பொருட்களை பறக்கும் படை அதிகாரிகள் நேற்று பறிமுதல் செய்தனர்.

கோவை சிங்காநல்லூர் தொகுதிக்கு உட்பட்ட 9-வது பறக்கும் படையினர் அலுவலர் சாமிநாதன் தலைமையில் நேற்று கொடிசியா சாலையில் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, அவிநாசி சாலை நோக்கி வந்த வேனை நிறுத்தி சோதனையிட்டனர்.

வேனில் 6 கிலோ தங்கம் மற்றும் வைர நகைகள், 8.47 கிலோ வெள்ளிப் பொருட்கள் இருந்தன. இவற்றின் மதிப்பு ரூ.10 கோடியே 18 லட்சத்து 21 ஆயிரம் ஆகும். ஆனால், உரிய ஆவணங்கள் இல்லாததால், அலுவலர்கள் நகைகளை பறிமுதல் செய்தனர்.

தொடர்ந்து தேர்தல் நடத்தும் அலுவலரிடம் தகவல் தெரிவித்துவிட்டு, கோவை தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் அருகே உள்ள கருவூலத்தில் ஒப்படைத்தனர்.

இதேபோல், திருப்பூர் மாவட்டம் பல்லடம், செட்டிபாளையம் சாலை பிரிவில் தேர்தல் பறக்கும்படை அதிகாரிகள் நேற்று முன்தினம் சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது கோவையில் இருந்து திருப்பூர் நோக்கிச் சென்றவேனை நிறுத்தி சோதனையிட்டனர்.

இதில் கூரியர் பில்மட்டும் வைத்துக்கொண்டு தங்க, வைர நகைகள், வெள்ளி பொருட்கள் 15 பெட்டிகளில் கொண்டு சென்றது தெரியவந்தது. இதன் மதிப்பு ரூ.2.75 கோடியாகும்.

திருப்பூரில் உள்ள நகைக் கடைக்கு டெலிவரி செய்வதற்காக நகைகளை கொண்டு செல்வதாக வேன் ஓட்டுநர் தெரிவித்தார். எனினும் உரிய ஆவணம் இல்லாததால் அவற்றைப் பறிமுதல் செய்து தேர்தல் நடத்தும் அலுவலரான சரவணனிடம் ஒப்படைத்தனர்.

## கோடை, வார விடுமுறைகளை முன்னிட்டு தமிழகம் முழுவதும் 835 சிறப்பு பஸ்கள் இயக்கம்



**சிவகங்கை, ஏப்.17:** தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குனர் ஆர்.மோகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-


கோடை விடுமுறை மற்றும் வார விடுமுறை நாட்களை முன்னிட்டு சென்னை கிளாம்பாக்கத்தில் இருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு 17-ந்தேதி (வெள்ளிக்கிழமை) 295 பஸ்களும், 18-ந்தேதி (சனிக்கிழமை) 310 பஸ்களும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னைகோயம்பேட்டில் இருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஓசூர், பெங்களூரு ஆகிய இடங்களுக்கு 17-ந்தேதி (வெள்ளிக்கிழமை) 55 பஸ்களும், 18-ந்தேதி (சனிக்கிழமை) 55 பஸ்களும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், பெங்களூரு, திருப்பூர், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் இருந்தும் பல்வேறு இடங்களுக்கு 100 சிறப்பு பஸ்களும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. மாதாவரத்தில் இருந்து 17-ந் தேதி மற்றும் 18-ந் தேதி ஆகிய நாட்களில் 20 பஸ்களும் சிறப்பு பஸ்களாக இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், ஞாயிற்றுக்கிழமை சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூரு திரும்ப வசதியாக பயணிகளின் தேவைகேற்ப அனைத்து இடங்களிலிருந்தும் சிறப்பு பஸ்கள் இயக்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

## மதுரை மீனாட்சி-சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம்: 19-ம் தேதி டிக்கெட் முன்பதிவு தொடக்கம்



**மதுரை, ஏப்.17:** மதுரை மீனாட்சி அம்மன் கோவில் இணை கமிஷனர் சுரேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

உலக புகழ்பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் சித்திரை திருவிழா வருகிற 19-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி 30-ம் தேதி நிறைவு பெறுகிறது. விழாவில் முக்கிய விழாவான மீனாட்சி-சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம் வருகிற ஏப்ரல் 28-ம் தேதி செவ்வாய்க்கிழமை (சித்திரை 15-ம் தேதி) கோவிலின் வடக்கு, மேற்கு ஆடி வீதியில் உள்ள திருக்கல்யாண மண்டபத்தில் காலை 8.35 மணிக்கு மேல் 8.59 மணிக்குள் நடைபெற உள்ளது. திருக்கல்யாணத்தை காண வரும் பக்தர்களின் வசதிக்காக ரூ.200, ரூ.500 கட்டண சீட்டுகள் வைத்திருப்பவர்கள் வடக்கு கோபுரம் வழியாகவும், பக்தர்கள் கட்டணமில்லா தரிசன முறையில் முதலில் வருபவர்களுக்கே அனுமதி என்ற முறையிலும் தெற்கு கோபுரம் வழியாகவும் அனுமதிக்கப்பட உள்ளனர்.


திருக்கல்யாணத்திற்கான கட்டணச்சீட்டு முன்பதிவு செய்யும் வசதி கோவில் இணையதளமான maduraimeenakshi.hrce.tn.gov.in மற்றும் இந்து சமய அறநிலையத்துறை இணையதளமான hrce.tn.gov.in ஆகியவற்றில் வருகிற 19-ம் தேதி முதல் 22-ம் தேதி இரவு 9 மணி வரை ஏற்படுத்தப்பட்டு உள்ளது. ஒரு நபரால் ரூ.500 கட்டண சீட்டு 2 மட்டுமே பெற முடியும். ரூ.200 கட்டண சீட்டை ஒருவர் 3 வரை பெறலாம். ஆனால் ஒரே நபர் ரூ.500, ரூ.200 கட்டண சீட்டை பெற முடியாது. பிறந்த தேதி சரியாக பூர்த்தி செய்து இருக்க வேண்டும். ஒரு பதிவுக்கு ஒரு அலைபேசி எண் மட்டுமே பயன்படுத்த முடியும். பாதுகாப்பு கருதி திருக்கல்யாணத்தன்று குழந்தைகளை அழைத்து வருவதை தவிர்க்கவும்.

மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்கு சொந்தமான எல்லீஸ்நகரில் அமைந்துள்ள யாத்ரி நிவாஸ் தங்கும் விடுதியில் ரூ.500, ரூ.200 கட்டண சீட்டை 19-ம் தேதியில் இருந்து நேரில் வந்து பதிவு செய்து கொள்ளலாம். ஆதார் நகல், புகைப்படத்துடன்கூடிய அடையாள சான்று, அலைபேசி எண், இ-மெயில் முகவரி அவசியம். கூடுதல் எண்ணிக்கையில் முன்பதிவு செய்திருந்தால் குலுக்கல் முறையில் தேர்வு செய்து அலைபேசி, இ-மெயிலில் 23-ம் தேதி அன்று தகவல் தெரிவிக்கப்படும்.

பக்தர்கள் 24-ம் தேதி முதல் 27-ம் தேதி வரை காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை எல்லீஸ் நகரில் அமைந்துள்ள யாத்ரி நிவாஸ் தங்கும் விடுதியில், தங்களுக்கு வந்த எஸ்.எம்.எஸ்., இ-மெயிலை காண்பித்து பணம் செலுத்தி திருக்கல்யாண கட்டண சீட்டை பெறலாம். ரூ.500 மதிப்பிலான கட்டணச்சீட்டு பெற்றவர்கள் வடக்குமொட்டை முனீஸ்வரர் சன்னதி அருகில் உள்ள வழியிலும், ரூ.200 கட்டண சீட்டு பெற்றவர்கள் வடக்கு, கிழக்கு சித்திரை வீதி சந்திப்பு அருகே அமைக்கப்பட்டுள்ள பாதை வழியாகவும் வடக்கு கோபுரம் பகுதியில் அனுமதிக்கப்படுவார்கள். திருக்கல்யாண டிக்கெட் பெற்றவர்கள் அன்று காலை 5 மணியில் இருந்து 7 மணிக்குள் அவர்களுக்கான ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தில் அமர்ந்து இந்த திருக்கல்யாணத்தை பார்க்கலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## சாத்தூரில் ஆம்னி பஸ் -பைக் மோதல்: பிளஸ் 2 மாணவர்கள் 3 பேர் பலியான சோகம்



**விருதுநகர், ஏப்.17:** விருதுநகர் மாவட்டம் சிவகாசி பகுதியை சேர்ந்த பள்ளிக்கூட மாணவர்கள் கோகுல் (வயது 17), பிரசன்னா (17) மற்றும் யுவராஜ் (17). நண்பர்களான இவர்கள் 3 பேரும் ஒரே பள்ளியில் படித்து வந்தனர். நடந்து முடிந்த பிளஸ்-2 தேர்வு எழுதி உள்ளனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு இவர்கள் 3 பேரும் ஒரே மோட்டார் சைக்கிளில் சாத்தூர்-கோவில்பட்டி நான்கு வழிச்சாலையில் உப்பத்தூர் விலக்கு பகுதியில் உள்ள டீக்கடைக்கு சென்று கொண்டிருந்தனர். காட்டுப்பள்ளி வாசல் பகுதியில் சென்ற போது எதிரே கன்னியாகுமரியில் இருந்து ஒரு ஆம்னி பஸ் வந்தது. அந்த பஸ் எதிர்பாராதவிதமாக மோட் டார் சைக்கிள் மீது மோதியது. இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 3 பேரும், தூக்கி வீசப்பட்டனர்.

இந்த விபத்தில் படுகாயம் அடைந்த யுவராஜ், பிரசன்னா ஆகிய 2 பேரும் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். உயிருக்கு போராடிய கோகுலை அருகில் இருந்தவர்கள் மீட்டு சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

ஆனால் கொண்டு செல்லும் வழியிலேயே அவரும் பரிதாபமாக உயிரிழந்தார். இந்த விபத்து தொடர்பாக ஆம்னி பஸ்சை ஓட்டி வந்த கன்னியாகுமரி மாவட்டம் கருங்கல் பகுதியை சேர்ந்த டிரைவர் ஆஸ்டினை (26), சாத்தூர் தாலுகா போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஆசனூர் வனப்பகுதியில் காட்டுத்தீ - 150 ஏக்கர் எரிந்து சேதம்



**ஈரோடு, ஏப்.17:** ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் புலிகள் காப்பக வனப்பகுதியில் யானை, புலி, சிறுத்தை, மான், கரடி உட்பட பல்வேறு வனவிலங்குகள் வசித்து வருகின்றன. மேலும் இங்கு அரிய வகை மரங்கள், மூலிகை செடிகள் ஆயிரக்கணக்கில் உள்ளன. கடந்த சில மாதங்களாக மழை பெய்யாததால் வனப்பகுதியில் கடுமையான வறட்சி ஏற்பட்டு வருகிறது

மழை இல்லாததால் மரம் மற்றும் செடி, கொடிகள் காய்ந்து கிடக்கிறது. நேற்று முன்தினம் ஆசனூர் மலைப்பகுதியில் உள்ள மாவள்ளம் வனப்பகுதியில் திடீரென காட்டுத்தீ பரவியது. இதனால் வனப்பகுதியில் உள்ள மரம், செடி, கொடிகள் எரிந்து சேதம் அடைந்தது.

தகவல் அறிந்து வனத்துறையினர் மற்றும் ஆசனூர் தீயணைப்பு துறையினர் சம்பவ இடத்திற்கு சென்று தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். ஆனால் அந்தப் பகுதியில் காற்று வேகமாக வீசியதால் தீ மளமளவென வனப்பகுதி முழுவதும் பரவியது. வனத்துறையினர் ஊழியர்கள் மற்றும் தீயணைப்பு வீரர்கள் இணைந்து தீயை அணைக்க முடியாமல் திணறினர். மொத்தம் 6 தீயணைப்பு வாகனங்கள் மூலம் தீயணைப்பு வீரர்கள் மற்றும் வனத்துறை ஊழியர்கள் தீயை அணைக்க போராடினர்.

இந்நிலையில் வனப்பகுதியில் தீ பரவுவது கட்டுப்படுத்தப்பட்டதாக வனத்துறையினர் தெரிவித்துள்ளனர். இருப்பினும் அப்பகுதியில் தீயணைப்புத் துறை மற்றும் வனத்துறை ஊழியர்கள் முகாமிட்டு கண்காணித்து வருகின்றனர். இந்த தீ விபத்து மூலம் சுமார் 150 ஏக்கர் பரப்பிலான மரம், செடி, கொடிகள், மூலிகை மரங்கள் எரிந்து சேதம் அடைந்துள்ளது.

# தானியங்கி கதவுகளுடன் கூடிய புதிய மின்சார ரெயில்- சென்னையில் தயாரானது

**சென்னை, ஏப்.17:** மும்பை, கொல்கத்தா, டெல்லி ஆகிய நகரங்களில் இயக்கப்படும் மின்சார ரெயில்களில் நாள்தோறும் லட்சக்கணக்கானோர் பயணம் செய்கின்றனர். இருப்பினும், அலுவலக நேரங்களில் ஏற்படும் நெரிசல் காரணமாக ரெயில் படியில் தொங்கியபடி பயணம் செய்து தவறி விழும் சம்பவங்களும் நிகழ்கின்றன. இதை தவிர்க்க, தானியங்கி கதவுகளுடன் கூடிய புதிய மின்சார ரெயில்களைத் தயாரிக்க ரெயில்வே வாரியம் முடிவு செய்தது.

அதற்கேற்ப புதிய வடிவமைப்பை தயாரித்து வழங்கும் பணி சென்னையில் உள்ள ஐ.சி.எப். ஆலையிடம் கடந்த ஆண்டு ஜூன் மாதம் ஒப்படைக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, தானியங்கி கதவுடன் கூடிய முதல் ரெயிலை தயாரிக்கும் பணி கடந்த ஆண்டு இறுதியில் தொடங்கியது. இப்பணி கடந்த மாதம் முடிவடைந்தது. பல கட்ட சோதனைக்குப் பிறகு, இந்த ரெயில் மும்பைக்கு





அனுப்பப்பட்டு உள்ளது.

இதுகுறித்து ஐ.சி.எப். அதிகாரிகள் கூறியதாவது:- மும்பை, சென்னையில் தான்' அதிக அளவில் மின்சார ரெயில்கள் இயக்கப்படுகின்றன. தினமும் பல லட்சம் பேர் பயணிக்கும் நிலையில், அலுவலக நேரங்களில் 10 நிமிடங்கள் ரெயில் தாமதமானாலும், ரெயில்களில் அதிக அளவில் நெரிசல் ஏற்படுகிறது. எனவே, நெரிசல் மிகுந்த நேரங்களில் கூடுதல் மின்சார ரெயில்களை இயக்க அனைத்து மண்டலங்களுக்கும் ரெயில்வே அறிவுறுத்துகிறது.

அதேபோல, ஏசி வசதி இல்லாத, தானியங்கி கதவுகளுடன் கூடிய 12 பெட்டிகள் கொண்ட முதல் மின்சார ரெயிலை தயாரித்து, மும்பைக்கு அனுப்பி உள்ளோம். கூடுதல் இடவசதி, நல்ல காற்றோட்டம் கிடைக்கும் வகையில் பெட்டி வடிவமைக்கப்பட்டு உள்ளது. அடுத்த 30 நாட்களில் 2-வது ரெயிலைத் தயாரித்து மும்பைக்கு அனுப்ப உள்ளோம். பயணிகள் வரவேற்பை பொறுத்து, தேவைப்பட்டால், இந்த ரெயில்களில் புதிய மாற்றங்கள் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர்கள் கூறினர்.




# தேர்தல் நடத்தை விதிகளை மீறியதாக ஓ.பன்னீர்செல்வம் மீது வழக்குப்பதிவு

**சென்னை, ஏப்.17:** தமிழக சட்டசபை தேர்தல் வருகிற 23-ந் தேதி நடைபெற உள்ளது. இதனால் தேர்தல் களம் அனல் பறக்கும் வகையில் அமைந்துள்ளது. தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தங்களது தொகுதிகளில் வீதி வீதியாக நடந்து சென்றும், பிரசார வாகனத்தில் சென்றும் சூறாவளி பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், போடி தாலுகா அம்மாபட்டியில் உள்ள சுந்தரராஜபுரம் பகுதியில் போடி தொகுதி தி.மு.க. வேட்பாளரும், முன்னாள் முதல்-அமைச்சருமான ஓ.பன்னீர் செல்வம் பிரசாரத்தில் ஈடுபட்டார். அப்போது அனுமதிக்கப்பட்ட நேரத்தை கடந்தும் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது.

இதுகுறித்து நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி தேர்தல் பறக்கும் படை அலுவலர் நவநீத பாண்டியன் போடி போலீஸ் நிலையத்தில் புகார் கொடுத்தார். அதன்பேரில், ஓ.பன்னீர்செல்வம், முன்னாள் எம்.பி. ரவீந்திர நாத், கட்சி நிர்வாகிகள் உள்பட 5 பேர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# "துரியோதன கும்பலிடம் போய் சேர்ந்த ஓபிஎஸ்" - போடியில் டிடிவி.தினகரன் காரசாரம்

"சட்டசபையில் ஜெயலலிதாவை தாக்கிய துரியோதன கும்பலிடம் போய் சேர்ந்திருக்கிறார் ஓபிஎஸ்" என டிடிவி.தினகரன் கடுமையாக தாக்கிப் பேசினார்.

தேனி மாவட்டம் போடி தொகுதியில் அதிமுக வேட்பாளர் வி.டி. நாராயணசாமியை ஆதரித்து அமமுக பொதுச் செயலாளர் டிடிவி.தினகரன் நேற்று மாலை வாக்குச் சேகரித்தார். அப்போது அவர் பேசியதாவது; வரும் வழியில் ஒரு விளம்பர தட்டியைப் பார்த்தேன். அதில் உள்ள திமுக வேட்பாளரை (ஓபிஎஸ்) பார்த்ததும் திக்கென்று ஆகி விட்டது. அவரை நான் தாக்கிப் பேச இங்கு வரவில்லை.

அரசியலில் உச்சப்பட்ச நிலையை அடைந்துவிட்டு இன்று, எம்ஜிஆர், ஜெயலலிதாவால் தீயசக்தி என்று கூறிய கட்சியில் போய் அவர் சேர்ந்திருக்கிறார். உயிருடன் இருந்த எம்ஜிஆரை இறந்துவிட்டதாக கூறி பொய் பிரச்சாரம் செய்தவர் கருணாநிதி. அவரை எல்லாம் ஓபிஎஸ் மிஞ்சிவிட்டார். பெரியகுளம் நகரச் செயலாளராக இருந்த ஓபிஎஸ்ஸை நான் சொன்ன ஒரு காரணத்துக்காக மாவட்ட செயலாளராக ஜெயலலிதா மாற்றினார். படிப்படியாக எம்எல்ஏ, அமைச்சர், எதிர்கட்சித் தலைவர் முதல்வர் என்று ஓபிஎஸ் அரசியலில் உச்சம் தொட்டது அதிமுக-வில் தான். கோடிக்கணக்கான தொண்டர்களின் உழைப்பினால் தான் இந்த பதவிகள் எல்லாம் அவருக்குக் கிடைத்தது.

இதை எல்லாம் மறந்து எப்படி திமுக-வில் இணைய முடிகிறது. எப்படி இவருக்கு தூக்கம் வருகிறது. மனசாட்சியே கிடையாதா? எப்படி வீட்டில் இவருக்கு சாப்பாடு போடுகிறார்கள் என்றே தெரியவில்லை. பதவி, பணம் இருந்தால் தான் ஓபிஎஸ்ஸை வீட்டிலேயே சேர்த்துக் கொள்வார்கள் போல. என்னிடமும் தான் திமுக தரப்பிலிருந்து பேசினார்கள். நான் சேர்ந்திருந்தால் என்னை வீட்டிலேயே சேர்த்திருக்க மாட்டார்கள். சாப்பாட்டில் எதையாவது வைத்து விடுவார்கள். ஜெயலலிதா மீதான விசுவாசத்தால் நான் திமுக-வுக்கு பெப்பே கொடுத்துவிட்டேன்.

சட்டசபையில் ஜெயலலிதாவை தாக்கிய துரியோதன கும்பலிடம் போய் சேர்ந்திருக்கிறார் ஓபிஎஸ். அதிமுக-வில் சேர்த்துக் கொள்ளாததால் தான் திமுக-வில் சேர்ந்ததாக கபட நாடகம் ஆடுகிறார். தனிக்கட்சி கூட அவர் ஆரம்பித்திருக்கலாம். ஒரு தொண்டனாகக் கூட இருந்திருக்கலாம். அதை விடுத்து காலமெல்லாம் எதிர்த்து நின்ற திமுக-வில் சேர்ந்தது, அக்கட்சிக்கு பிடித்த கெட்ட நேரம் தான். ஓபிஎஸ் பரதன் அல்ல ராவணன், இவருக்கு போடியில், பெரியகுளத்தில் உள்ளது எல்லாம் பரம்பரை சொத்தா? காசை நம்பித்தான் இங்கு வேட்பாளராக நிற்கிறார். இங்கு திமுக-வில் லட்சுமணன் போன்ற நல்ல வேட்பாளர்கள் போட்டியிட காத்திருந்தனர். ஆனால் ஓபிஎஸ், இடையில் புகுந்து அதைக் கெடுத்து விட்டார். ஸ்டாலின் பல வாக்குறுதிகளைத் தந்து அவரை ஏமாற்றி விட்டார். அவரது ஆட்சி முடியப்போகிறது. எனக்கும், பழனிசாமிக்கும் கருத்து வேறுபாடு இருந்தது. ஆனால், நாங்கள் ஜெயலலிதா கொள்கையில் விசுவாசமாக இருந்தோம். போடி தொகுதியில் ஓபிஎஸ்ஸுக்கு சரியான பாடம் புகட்டுங்கள். இல்லை என்றால் அரசியலில் நியாயம் தர்மம் இல்லாமலே போய் விடும். இவ்வாறு அவர் பேசினார்.

# எனது கனவு திமுகவை ஆட்சியில் இருந்து வீழ்த்துவது தான்: சீமான் சீற்றம்

புதுக்கோட்டையில் நாதக வேட்பாளர் எழிலரசியை ஆதரித்தும், ஆலங்குடியில் ஆர்.ராஜாராமை ஆதரித்தும் அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் நேற்று பிரச்சாரம் செய்தார். முன்னதாக, புதுக்கோட்டையில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

தொகுதி மறுவரையறை, வாக்காளர் சிறப்பு திருத்தம் போன்ற செயல்களை அவசரமாக கொண்டு வந்து, மக்களை பதற்றமான நிலைமைக்கு வைத்திருப்பது பாஜக-வுக்கு வாடிக்கை. மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி எண்ணிக்கையை முடிவு செய்வதை ஏற்க முடியாது. திமுக-வுக்கும், தவெக-வுக்கும் தான் போட்டி என்று பேசும் தவெக தலைவர் விஜய், முதல்வர் ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி மற்றும் பாஜக தலைவர்கள் போட்டியிடும் தொகுதிகளில் பிரச்சாரத்துக்குச் செல்லாமல், நான் போட்டியிடும் காரைக்குடிக்குத் தான் பிரச்சாரம் செய்ய வந்துள்ளார்.

அப்படியென்றால் ஊழலை ஒழிப்பேன் என்று ஆவேசமாக பேசும் விஜய், யாரை போட்டியாளராக பார்க்கிறார்? தமிழினத்தை மற்ற கட்சியினர் ஆள நினைக்கிறார்கள். நான் அவர்கள் வாழ நினைக்கிறேன். இலவச திட்டங்கள் என்பது ஏமாற்று வேலை. அதனால் தான் இலவசங்களை ஒழிக்க வேண்டும் என்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

பின்னர், பட்டுக்கோட்டை வேட்பாளர் கண்ணன், பேராவூரணி வேட்பாளர் புவனா ஆகியோரை ஆதரித்து பட்டுக்கோட்டை தபால் நிலையம் முன்பு பேசிய சீமான், "நாதக ஆட்சிக்கு வந்ததும் விவசாயிகள் கொண்ட குழுவை அமைத்து ஆய்வு செய்து, அவர்களது பரிந்துரைப்படி அரசே விளைபொருட்களுக்கான விலையை நிர்ணயிக்கும். மக்களுக்கு நீர், உணவு ஆகியவையே முக்கியம். இதற்கான பொருளாதார கட்டமைப்பை நாதக அவசியம் கொண்டு வரும்.

திமுக ஒரு குடும்பத்தின் சொத்தாக, நிறுவனமாக கட்டமைக்கப்பட்டுள்ளது. கருணாநிதியின் மகன் என்பதைவிட வேறு தகுதி மு.க.ஸ்டாலினுக்கு இல்லை. தமிழகத்தில் பல்வேறு பிரச்சினைகள் உள்ள நிலையில், அதுகுறித்து கேட்காமல், உனது கனவு என்ன என்று கேட்கின்றனர். எனது கனவு திமுக-வை ஆட்சியில் இருந்து வீழ்த்துவதுதான். எனவே, இந்த முறை தேர்தலில் நாதக-வுக்கு மக்கள் ஆதரவு அளிக்க வேண்டும்" என்றார்.

# வாக்களிப்பதை உறுதி செய்ய, மாணவர்களுக்கு தொடர் விடுமுறை: பல்கலைக்கழகம் வெளியிட்ட முக்கிய உத்தரவு

**கோவை, ஏப்.17:** தமிழ் நாட்டில் வருகிற 23-ஆம் தேதி சட்டசபை தேர்தல் நடைபெறுகிறது. வாக்கு எண்ணிக்கை மே 4-ம் தேதி நடைபெறுகிறது. தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதும் தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துள்ளன.

அரசியல் கட்சிகள் பிரசார பணிகளில் மும்முரம் காட்டி வருகின்றன. சட்டசபை தேர்தலை ஒட்டி தமிழக அரசியல் களம் சூடுபிடித்துள்ளது.

இந்நிலையில் கல்லூரி மாணவர்கள் மற்றும் முதல்முறை வாக்காளர்களை ஊக்கப்படுத்தும் வகையில், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் அதன் 18 உறுப்பு மற்றும் 28 இணைப்பு கல்லூரிகளுக்கு வாக்குப்பதிவு அடுத்த நாளான ஏப்ரல் 24 ம் தேதி விடுமுறை அளிக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் பல்கலைக்கழகம், தேர்தல் நாள், வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு ஆகிய நாட்களை தொடர் விடுமுறையாக உறுதிப்படுத்த வேண்டும் என கல்லூரிகளுக்கு பல்கலைக்கழகம் அறிவுறுத்தி உள்ளது.

குறிப்பாக விடுதியில் தங்கியிருக்கும் மாணவ, மாணவியர் எவ்வித சிரமமின்றி தங்கள் தொலைதூரத்தில் உள்ள சொந்த ஊர்களுக்கு சென்று வாக்கு செலுத்தவும், அவர்களை ஊக்கப்படுத்தவும் ஏதுவாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஏப்ரல் 24-ம் தேதி விடுமுறையை மாற்று நாளில் வேலை நாட்களாக பயன்படுத்தலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவை கட்டாயம் செயல்படுத்த வேண்டும் எனவும், செயல்படுத்த தவறினால், சம்பந்தப்பட்ட கல்லூரி நிர்வாகம் ஏதும் நடவடிக்கை எடுக்கப்படும் என முதல்வர்களுக்கு பல்கலைக்கழகம் தரப்பில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

# தாளவாடி அருகே கரும்பு தோட்டத்துக்குள் புகுந்து ஒற்றை யானை அட்டகாசம்- விவசாயிகள் அச்சம்

**ஈரோடு, ஏப்.17:** ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்துக்கு உட்பட்ட வனப்பகுதியில் யானை, சிறுத்தை, புலி, கரடி, மான், காட்டெருமை உட்பட ஏராளமான வனவிலங்குகள் வசித்து வருகின்றன. குறிப்பாக யானைகள் அதிக அளவில் வசித்து வருகின்றன.

தற்போது வனப்பகுதியில் வறட்சி நிலவி வருவதால் உணவு, தண்ணீரை தேடி யானை கூட்டங்கள் அடர்ந்த வனப்பகுதியை விட்டு வெளியேறி கிராமத்துக்குள் புகுந்து விவசாய விளை நிலங்கள் பயிர்களை தொடர்ந்து சேதப்படுத்தி வருகிறது.

இந்நிலையில் தாளவாடி அடுத்த ஜீரகள்ளி வனச்சரகம் உட்பட்ட கிருஷ்ணாபுரம் கிராமத்தில் ரங்கராஜ் என்பவர் கரும்புத் தோட்டத்தில்



கரும்புகளை பயிரிட்டு இருந்தார். நேற்று இரவு வனப்பகுதியை விட்டு வெளியேறிய ஒற்றை யானை ஒன்று ரங்கராஜ் கரும்பு தோட்டத்துக்குள் புகுந்து கரும்பை தின்றும் மிதித்தும் சேதம் செய்தது. பின்னர் விவசாயிகள் ஒன்றிணைந்து பட்டாசுகளை வெடித்து யானையை விரட்டினர்.

கரும்பு பயிர்களுக்கு வனத்துறையினர் உரிய நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். தாளவாடி பகுதியில் கடந்த சில நாட்களாக ஒற்றை யானை இரவு நேரங்களில் கிராமத்துக்குள் புகும் சம்பவம் விவசாயிகள், பொதுமக்களிடையே அதிர்ச்சியையும் அச்சத்தையும் ஏற்படுத்தி உள்ளது.

# குத்துவிளக்கு ஏற்றியபோது சேலையில் தீப்பற்றி பெண் உயிரிழப்பு

**தூத்துக்குடி, ஏப்.17:** தூத்துக்குடி மட்டக்கடை, கோவில் தெருவைச் சேர்ந்தவர் பாலசுப்பிரமணியன். இவரது மனைவி பிரேமா (வயது 58). இந்தத் தம்பதிக்கு ஒரு மகன் உள்ளார். அவர் தற்போது வெளிநாட்டில் வேலை பார்த்து வருகிறார். கடந்த சில தினங்களுக்கு முன்பு, பிரேமா தனது வீட்டில் குத்துவிளக்கு ஏற்றி வைத்துச் சாமி கும்பிட்டுக் கொண்டிருந்தார். அப்போது எதிர்பாராதவிதமாக அவர் உடுத்தியிருந்த சேலையின் முந்தானையில் விளக்கில் எரிந்துகொண்டிருந்த தீ பிடித்துள்ளது.

கண் இமைக்கும் நேரத்திற்குள் தீ உடல் முழுவதும் பரவியதில் அவர் படுகாயமடைந்தார். அவரது அலறல் சத்தம் கேட்டு ஓடிவந்த அக்கம் பக்கத்தினர், பிரேமாவை மீட்டு உடனடியாக ஒரு தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். பின்னர் மேல் சிகிச்சைக்காக கடந்த 8-ம் தேதி தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

இருந்தபோதும் சிகிச்சை பலன் அளிக்காமல் நேற்று முன்தினம் இரவு அவர் பரிதாபமாக உயிரிழந்தார். இந்த சம்பவம் குறித்து வடபாகம் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் காசிபாண்டியன் வழக்குப்பதிவு செய்துள்ளார். விபத்து நடந்த விதம் குறித்து காவல்துறையினர் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# தேக்கடியில் களைகட்டும் மலர் கண்காட்சி: குடும்பத்துடன் ரசிக்கும் சுற்றுலாப் பயணிகள்

**கம்பம், ஏப்.17:** தேக்கடியில் நடைபெறும் மலர் கண்காட்சிக்கு சுற்றுலா பயணிகள் குடும்பம், குடும்பமாக குவிவதால் கண்காட்சி களைகட்டியுள்ளது. தமிழக - கேரள எல்லைப்பகுதியில் குமுளி அருகே உள்ள தேக்கடி மிகவும் பிரசித்திபெற்ற சுற்றுலா தலமாகும். இங்குவரும் சுற்றுலா பயணிகள் படகு சவாரி செய்து இயற்கை அழகு, வன விலங்குகளை ரசிப்பது வழக்கம். இங்கு நடைபெறும் மலர் கண்காட்சி மிகவும் பிரசித்தி பெற்றது.

தேக்கடி வேளாண் தோட்டக்கலை சங்கம், குமுளி பஞ்சாயத்து நிர்வாகம், மண்ணாரத்தரை கார்டன் இணைந்து நடத்தும் 18-வது மலர் கண்காட்சி தேக்கடி - குமுளி ரோட்டில் கல்லறைக்கல் மைதானத்தில் கடந்த ஏப்.1-ம் தேதி தொடங்கியது.

தற்போது தமிழகம், கேரளாவில் பள்ளிகளுக்கு விடுமுறை காலம் என்பதால் மலர் கண்காட்சியை பார்வையிட இரு மாநிலங்களில் இருந்தும் சுற்றுலா பயணிகள் குடும்பம், குடும்பமாக வந்து செல்கின்றனர். சனி,



ஞாயிறு போன்ற விடுமுறை நாட்களில் சுற்றுலா பயணிகள் அதிகளவில் வருகின்றனர். இக்கண்காட்சியில் 100-க்கும் மேற்பட்ட மலர் வகைகளும், ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மலர்களும், நூற்றுக்கணக்கான மூலிகை செடிகளும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இதுதவிர அலங்காரச் செடிகள், தோட்ட செடிகள், சமையலறை தோட்டம் அமைக்க தேவையான நாற்றுகள் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் சிறுவர்களை கவரும் விதமாக கடல்கன்னி, பேய் பங்களா கண்காட்சி அரங்குகள், ராட்சத ராட்டினங்களும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் வேளாண் கருத்தரங்கம், மலர் அலங்கார போட்டிகள், சமையல் உள்ளிட்ட போட்டிகள் நடத்தப்படுகிறது. மலர் கண்காட்சி மே 3ம் தேதி வரை நடைபெறும்.

தினசரி காலை 10 மணி முதல் இரவு 10 மணி வரை பார்வையிடலாம். நுழைவு கட்டணம் ரூ.70 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சிறுவர்கள், மாணவர்களுக்கு கட்டணத்தில் சலுகை உண்டு. 7 வயதுக்கு குறைவான குழந்தைகளுக்கு கட்டணமில்லை என கண்காட்சி ஒருங்கிணைப்பாளர் தாமஸ் தெரிவித்தார்.

PUBLISHED BY R.S ROSHINE PRINTED BY R.S. ROSHINE ON BEHALF OF R.S. ROSHINE PRINTED AT J.M. PROCESS, NO 29, V.N. DOSS ROAD, BORDERTHOTTAM, MOUNT ROAD, CHENNAI – 600002.
AND PUBLISHED FROM NO. 42/62, BUCHAMMAL STREET, 1ST FLOOR, NEW WASHERMENPET, TONDIARPET, CHENNAI, TAMILNADU – 600081. EDITOR: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM